பாம்பன் : குமரகுருதாச சுவாமிகள்

ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்

திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு கக	மெய்கண்டான் யாண்டு-எ௱ய மாசித் திங்கள் 1933ஆ பிப்ரவரிமீ—மார்ச்சுமீ	பரல் உ

I. திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் தேவாரம்

கள்ளநெஞ்ச வஞ்சகக் கருத்தைவிட் டருத்தியோ
டுள்ளமொன்றி யுள்குவார் உளத்துளான் உகந்தவூர்
துள்ளிவாளை பாய்வயற் சுரும்புலாவு நெய்தல்வாய்
அள்ளல்நாரை ஆரல்வாரும் அந்தணாரு ரென்பதே.

பதவுரை:—

கள்ள நெஞ்ச வஞ்சகக் கருத்தை விட்டு—வஞ்சகத்தையுடைய நெஞ்சிலிருந்து எழுகின்ற வஞ்சகக் கருத்தை நீக்கி,

அருத்தியோடு—உண்மையான அன்புடன்

உள்ளம் ஒன்றி உள்குவார்—நெஞ்சோடு பொருந்தி நினைப்பவரது,

உள்ளத்துளான்—நெஞ்சில் நிலையாக விளங்கியிருக்கின்றவனாகிய சிவபெருமான்

உகந்த ஊர்—மகிழ்வுடன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் ஊரானது

சுரும்பு உலாவு நெய்தல் அள்ளல்வாய்—வண்டுகள் விளையாடுகின்ற கருங்குவளையும் சேறும் பொருந்தி யிருக்கின்றதும்,

வாளை துள்ளிபாய்—வாளைமீன்கள் துள்ளி விளையாடுகின்றதுமாயுள்ள,

வயல்—வயல்களில்

நாரை—நாரையானது

ஆரல் வாரும்—சிறுமீன்களைப் பிடிக்கின்ற

அந்தண் ஆரூர் என்பது—அழகும் குளிர்ச்சியுமுடைய திருவாரூர் என்று கூறப்படுவது.

விளக்கவுரை :—

கள்ள நெஞ்ச வஞ்சகக் கருத்து—கள்ளம், வஞ்சகம், கரவு என்பன ஒருபொருட் சொற்கள். வஞ்சகக் கருத்து வஞ்சக நெஞ்சிலிருந்து இயல்பா யெழுதலால் கள்ளநெஞ்ச வஞ்சகக் கருத்து என்றார். சிவபெருமான் வஞ்சகர் நெஞ்சில் தங்கான் என்பது தேவாரங்களில் பல இடங்களில் கூறப்பட்டிருக்கின்றது. **சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநின்றியூர் தேவாரம் 5-**வது பாட்டில் 'வஞ்சங் கொண்டார் மனஞ் சேரகில்லார்' என்று கூறியிருத்தல் காண்க.

உள்ளம் ஒன்றி உள்குவார்—உள்ளம் ஒன்றி உள்குதலாவது நெஞ்சில் அழுந்தி இடையறாது நினைத்தல்.

ஊர்—எழுவாய், ஆரூர் என்பது பயனிலை. ஏ. ஈற்றசை.

இந்தத் தேவாரப்பாட்டில் முன் இரண்டடிகளில் சிவபெருமான் எத்தகையருடைய உள்ளத்தில் விளங்கியிருப்பன் என்பதும் பின் இரண்டு அடிகளில் திருவாரூரில் காணப்படுகின்ற இயற்கை வருணனையுங் கூறப்படுகின்றன.

II. திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் ஞர்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்பர் அவர்தமை நாணியே.

பதவுரை :—

நெக்கு நெக்கு நினைபவர்—(தமக்கு இறைவனிடத்துள்ள தொடர்பையும் அவர் தம்மைப் பேரின்ப மடையச்செய்ய இடையறாது செய்துவரும் பேருதவியையும் அறிந்து அந்நன்றியறிதல் காரணமாக) நெகிழ்ந்து உருகி நினைக்கின்ற மாந்தர்களுடைய

நெஞ்சுளே புக்கு நிற்கும்—உள்ளத்திலுள்ளே அருள் ஒளியாக விளங்கி நிலையாக வீற்றிருக்கும்

பொன்ஞர்சடைப் புண்ணியன்—பொன்போலும் நிறம் பொருந்திய சடையை உடைய இறைவன்

பொக்க மிக்கவர் பூவும் நீரும் கண்டு—பொய்த்தன்மையை மிகுதியாக உடையவர் (தமக்கு வழிபாடு செய்யுங்கால் துணைப் பொருள்களாகக் கொள்கிற) பூவினையும் நீரினையும் (பிறபொருள்களையும்) கண்டு

அவர் தம்மை நாணி—அவருடைய உள்ளத்தைச் சேர்தற்கு வெள்கி

நக்கு நிற்பர்—சிரித்துக்கொண்டு புறமாக நிற்பர்.

விளக்கவுரை :—

நெக்கு நெக்கு நினைபவர்—நெகுதல்-உள்ளம் குழைந்து உருகுதல்; உயிர் உள்ளம் குழைந்து உருகுதல் இறைவனைச் சார்ந்து அவனது தன்மையை அடைதற்கு இன்றி அமையாது வேண்டப்படுவது. இரண்டு கடினமான உயிரில்பொருள்களும்கூட இளகி உருகினாலன்றி ஒன்றுடனொன்று சேரமாட்டா.

நெக்கு நெக்கு—அடுக்குத்தொடர்.

நினைபவர்—உயர்திணைப் பலர்பாற் படர்க்கை எதிர்கால வினையாலணையும் பெயர். நினைக்கிறவர் என நிகழ்காலத்தாற் கூறற்பாலது இயல்பு பற்றி எதிர்காலத்தாற் கூறப்பட்டது.

நெஞ்சு உளே—உள்ளே என்பது உளே எனக்குறுகி நின்றது. நெஞ்சு, உள்ளம், சிந்தை, மனம் என்பன ஒருபொருட் சொற்கள்.

புக்கு நிற்கும்—புகுதல் என்பது விளங்கித்தோன்றல். இறைவன் எல்லாருடைய உள்ளத்திலும் எப்பொழுதும் இருந்தாலும் தம்மிடத்து அன்பு செய்கிறவர்களுடைய உள்ளத்தில் விளங்கி ஏனையர்களுடைய உள்ளத்தில் விளங்காது நிற்பர்.

பொன் ஆர் சடைப்புண்ணியன்—பொன் இங்கே ஆகு பெயராய்ப் பொன்னினது நிறத்தைக் குறிக்கிறது. புண்ணியன்—நன்மையே எல்லா உயிர்களுக்கும் எப்பொழுதும் செய்கிறவன்.

பொக்கம்—பொய்த் தன்மை; பொக்க மிக்கவர் உலகத்தை மெய் எனவும் இறைவனைப்பொய் எனவும் மயங்கி அறிந்து திருவருளை முற்றிலும் மறந்து ஒழுகும் ஒழுக்கம் உடையவர்.

பூவும் நீரும்—பூ, நீர், தூபம், தீபம் நிவேதனம் முதலியன இறைவனை வழிபடுங்கால் வழங்கப்படும் துணைப்பொருள்கள். உள் அன்பு இன்றிச் செய்யப்படும் வழிபாட்டில் இப்பொருள்கள் ஆடம்பரமாயுள்ளனவே யன்றி யாதொருபயனையும் தருவன அல்ல. வழிபாடானது சார்ந்ததன் வண்ணமாகுந் தன்மை உடைய உயிர் இறைவனைச் சார்ந்து அவன் தன்மையை அடைதற்குப் படிமுறையில் அவனிடத்து நெருங்கி அணுகும்பயனைத் தரத்தக்கது. உயிர் உள்ளம் குழைந்து உருகினாலன்றி இப்பயன் உண்டாக மாட்டாது.

நக்கு நிற்பர்—நிற்பர்-தெரிநிலை எதிர்காலவினை முற்று நிகழ் காலத்தாற் கூறற்பாலது இயல்பு பற்றி எதிர்காலத்தாற் கூறப்பட்டது. இவர்கள் தாங்கள் அன்பின்றி ஆடம்பரத்துடன் செய்யும் வழிபாடு பயனைத்தரும் என்று எண்ணுகிற அறியாமையை நோக்கி இறைவன் சிரிப்பர்.

உள்ளீடான உண்மை அன்பு இன்றி மாந்தர் செய்யும் வழிபாட்டினை இறைவன் ஏற்றுக் கொள்ளான் என்பது இத் தேவாரப்பாட்டின் கருத்து.

மா. வே. நெல்லையப்பபிள்ளை.

தமிழ் அறிவியற் சொற்கள்

வடிவளவை - Geometry

[திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள்]

(முன் ௪௰-ம் பக்கத் தொடர்ச்சி)

Estimate	... திட்டம்
Detail estimate	... விவரத்திட்டம்
Abstract estimate	... பொழிப்புத்திட்டம்
Accurate estimate	... திருத்தத் திட்டம்
Rough estimate	... கிட்டுதிட்டம் (ஈண்டுக் கிட்டு என்பது ஆங்கிலச் சொல்லாகிய approaching என்பதன் பொருட்டு.)
Off-sets / Off-set lines	... விலக்க வரைகள்
Off-set pieces of scales	... விலக்க வளப்பன்கள்.
Base line	... பொதுவரை
To solve	... ஈவுகாண, ஈவெடுக்க.
To solve an equation	... இணையின் ஈவெடுக்க
Axes of co-ordinate	... துணையாயங்களின் இருசுகள், மையவரைகள்.
Cardinal points	... திசைகள், திசைமுனைகள்.
Cipher	... சுன்னம், சுன்.

Normal	செங்குத்தாக, செம்முடக்காக.
Plummet	தூக்குக் குண்டு
Substitute	ஈடு.
To substitute	ஈடாக்க, ஈடுபடுத்த
Mensuration	அளவுகணக்கியல், அளவலகியல்
Problem	கணக்கு (கண்ண - To reckon)
To solve a problem	கணக்கிற்கு ஈவுகாண.
Fathom	ஆறு அடி அல்லது நான்கு முழம்; ஆளாழம்.
Cardinal	(எத்) தனை, (இத்) தனை, (அத்)தனை. தொகை.
Ordinal	(எட்டா) வது, (பத்தா) வது. சுட்டு
Cardinal numbers	தொகையெண்; தனையெண்
Ordinal numbers	சுட்டெண்; வதுவெண்.
Wedge	ஆப்பு

Spheroid என்பதற்கு முட்டைவடிவு என்று பொருள் கொள்ளக்கூடுமாயினும் முட்டையின் ஒரு முனையைவிட மறுமுனை அகலமாயிருப்பதால் அப்பொருள் சிறவாது. எனவே சூம்புருண்டை என்று பொருள் கோடல் நேரிதாம்.

அவ்வண்ணமே *Oval* என்பதற்குச் சூம்பு வட்டம் என்றே பொருள் கோடல் வேண்டும்.

Curved face	நெளி முகம்.
Ellipsoid	ஒரைவட்டக்கட்டி.
Poly-hedra	பலபட்டைக்கட்டி.
Cross section	குறுக்கு வெட்டு.
Undevelopable	பரப்பலாகா.
Ex-centre	புறமையம்
Eccentric	ஒதுங்கு மையம், மையமொதுங்கிய.

Perpendicular plane	...	செங்குத்துத் தட்டை.
Globe	...	உலகு, உலகவுருண்டை, உலகுண்டை.
Wire globe	...	கம்பியுலகுண்டை, கம்பியுண்டை.
Screw	...	திருகு, மறை
Right handed screw	...	வலந்திருகு, வலமறை.
Left handed screw	...	இடந்திருகு, இடமறை.
Nail	...	ஆணி
Screw nail	...	திருகாணி, மறையாணி.

(திருகு என்பது சிறுவடி வினதற்கும் மறையென்பது பெருவடி வினதற்கும் வழங்கப்படுதல் தமிழ் மரபு.)

Thread of screw	...	மறைச்சுற்று, திருகுச் சுற்று, சுற்று.
Screw gauge	...	திருகுமட்டு, திருகியல் மட்டு.

Euclid Book 1. Theorem 34

யூக்லிட் 1-வது சுவடி-34-வது தேர்வு

The oppostie sides and angles of a parallelogram are equal to one another and each diagonal bisects the parallelogram—ஒரு இருபோக்கியின் எதிர் சிறைகளும் எதிர் முடக்குகளும் ஒன்றற்கொன்று ஒக்கும். ஒவ்வொரு முடக்குருவியும் இருபோக்கியைச் சரியிரு கூறுக்கும்.

Let A B C D be a parallelogram of which B D is a diagonal—கக்கா கிக்கி தான் ஒரு இருபோக்கியும் காக்கி அதில் ஒரு முடக்குருவியும் ஆகட்டும்.

It is required to prove that

(1) A B is equal to CD and AD is equal to CB
(2) The angle B A D is equal to the angle DCB
(3) The angle A D C is equal to the angle CBA
(4) The triangle A B D is equal to the triangle

C D B in area.

பின் வருவனவற்றைத் தெரிக்க வேண்டியது:—

1. *கக்காவிற்குக் கிக்கீயும் கக்கீயி,ற்குக் காக்கியும் சரியென்பது.*
2. *கீக்கக்கா முடக்கு காக்கிக்கீ முடக்கிற்குச் சரியென்பது.*
3. *கிக்கீக்கம் முடக்கு கக்காக்கிம் முடக்கிற்குச் சரியென்பது.*
4. *கக்காக்கீ மும்முடக்கி காக்கிக்கீ மும்முடக்கிற்குப் பரப்பில் சரியென்பது.*

Proof :—Because AB and DC are parallel and BD meets them, therefore, the angle A B D is eqnal to the alternate angle C D B.

தெரிப்பு:—கக்காவும் கிக்கீயும் ஒருபோகாக இருக்க அவைகளைக் காக்கீ முட்டுவதனால் கக்காக்கீ முடக்கு ஒன்று விட்ட கிக்கீக்கா முடக்கிற்கு ஒப்பு.

Again, because AD and B C are parallel and BD meets them, therefore, the angle A D B is equal to the alternate angle C B D—*இன்னும் கக்கீயும் காக்கியும் ஒருபோகாக இருக்க அவைகளைக் காக்கீ முட்டுவதனால் கக்கீக்கா முடக்கிற்கு ஒன்று விட்ட கிக்காக்கீ முடக்கு ஒப்பு.*

Hence in the triangles ABD and C D B because the angle A B D is equal to the angle C D B and B D is common to both—(proved) therefore the triangles are equal in all respects. (Euclid-Theorem 26)

இதனால் கக்காக்கீயும், காக்கிக்கீயுமான இருமும் முடக்கிகளில், காக்கக்கீ முடக்கிற்குக் கிக்கீக்கா முடக்கும் கக்கீக்கா முடக்கிற்குக் கிக்காக்கீ முடக்கும் ஒப்பாகையாலும் காக்கீ பொதுவரை யாதலாலும்—(தெரித்தது) இரு மும்முடக்கிகளும் எல்லா வகையினும் ஒரு சரியானவை. (யூக்லிட்-தேர்வு 26)

So that A B is equal to C D and A D is equal to C B. (1) —*அதனால் கக்காவானது கிக்கீக்கும், கக்கீயானது கிக்காவிற்கும் ஒப்பு.* (1)

and the angle B A D is equal to the angle D C B —(2) *மேலும் காக்கக்கீ முடக்கிற்குக் காக்கிக்கீ முடக்கு ஒப்பு* (2)

and the triangle A B D is equal to the triangle C A B in area (4)

இன்னும் கக்காக்கி முப்புடைக்கியும் காக்கிக்கி மும் முடக்கி யும் பரப்பில் ஒப்பு—(4)

And because the angle A D B is equal to the angle C B D (proved) and the angle C D B, is equal to the angle A B D therefore the whole angle ADC is equal to the whole angle C B A—(3) Q. E. D

அல்லாமலும் கக்கிக்கா முடக்கு, கிக்காக்கி முடக்கிற்கு ஒப் பானதாலும் (தெரிந்தது) கக்கிக்கா முடக்குக் கிக்காக்கி முடக் கிற்கு ஒப்பானதாலும் முழுமுடக்குக் கக்கிக்கியானது முழு முடக்கு கக்கிக் காவிற்கு ஒப்பு—(3) தெ. எ. அ.

—காழி. சிவ. கண்ணுசாமி *B. A.*

திருவள்ளுவரும் உரைநூலும்

[திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் M. A., M. L.]

முற்காலத்திலேயே தமிழர்கள் மனதைப் பற்றி அறிந்திருக் கிறார்கள். ஆனால் அதன் தத்துவங்கள் அடங்கிய நூல் ஒன்றும் இப்பொழுது நமக்குக் கிடைத்திலது. அப்பொழுது இருந்திருக்க லாம். மேல் நாட்டினர் மனமும் (Mind) ஆன்மாவும் (Soul) ஒன்றென்றே சொல்லி விடுவர். தமிழர்கள் முன்பிருந்தே ஐம் பூதங்களைப்பற்றி உணர்ந்திருக்கிறார்கள். தொல்காப்பியத்தில் நிலம், நீர், தீ, காற்று, வான் என்ற ஐம்பூதங்களும் சொல்லப் பட்டிருக்கின்றன. பஞ்சபூதங்களில் ஒரு பூதத்தை எடுத்துக் கொண்டால் வேறு பூதங்களும் அடங்கி யிருக்கின்றன. மண் என்று எடுத்துக்கொண்டால் பிருதிவி தத்துவம் மாத்திரம் இன்றி நீர் முதலிய வேறு தத்துவங்களும் அடங்கியிருக்கின்றன. திரு வள்ளுவரும்,

" வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும் "

என்று ஐந்து பூதங்களையும் சொல்லி யிருக்கிறார் மற்றும்

பொறி யுணர்ச்சியை (Sensation),

"ஊடற்கட் சென்றேன்மற் றோழி யதுமறந்து
கூடற்கட் சென்றதென் னெஞ்சு"

என்ற குறளிற் காண்கிறோம். நினைவுணர்ச்சியை (Perception),

"படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா தொன்றன்
உடல்சுவை யுண்டார் மனம்"

என்று காட்டியிருக்கிறார். கருத்துணர்ச்சி (Conception)

"அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு"

என்ற பாவில் அடங்கியிருக்கின்றது. அளவறிந்தார் என்பதிலிருந்து முற்காலத்தில் தமிழர்கள் அளவுநூல் (தர்க்கம் logic) வல்லாராய் இருந்தார்கள் என்பது பெறப்படுகின்றது. தன்னெஞ்சு (Conscience) என்பதை,

"தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்"

என்ற குறளினின்றும் அறிந்து கொள்கிறோம்.

புனைவாற்றல் (Imagination),

"காணுங்காற் காணேன் தவறாய காணாக்காற்
காணேன் றவறல் லவை"

என்ற செய்யுளில் அறியக்கிடக்கின்றது. ஆராய்ச்சியை (Investigating faculty)

"நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே யெனைத்தொன்று
மெவ்வநோய் தீர்க்கு மருந்து"

என்ற குறளடிகளால் உணரலாம்.

அலமருதல் (Dilemma),

"காமம் விடுவொன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேனிவ் விரண்டு"

என்ற கூற்றால் விளங்குகிறது.

ஐயம் (Doubt),

" அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு "

என்ற பாவிற் காணலாம்.

திரிபுணர்ச்சியை,

" மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று "

என்று கூறியிருப்பதால் தெரிந்து கொள்ளலாம்.

இனி நனவு, கனவு, துயில், துரியம் துரியாதீதம் என்பவற்றைப்பற்றித் திருவள்ளுவர் கூறியிருப்பதை ஆராய்வோம்.

நனவு, கனவு என்பவற்றை,

" நனவென வொன்றில்லை யாயிற் கனவினாற்
காதலர் நீங்கலர் மன் "

என்ற குறளில் காணலாம்.

துயிலைப்பற்றியோ,

" உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு "

என்றதினின்றும் அறிகிறோம். துரியநிலையை

" உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியே
னொள்ளமர்க் கண்ணாள் குணம் "

என்ற குறட் பாவில் அமைத்திருக்கிறார். துரியாதீதத்தை " அவாவறுத்தல் " என்னும் அதிகாரத்தில் " பேராவியற்கை " என்று கூறியிருப்பதினின்றும் தெரிந்து கொள்ளலாம். மனத்தின் அடக்கு மாற்றலை (Self control)

" புல்லி விடாஅப் புலவியுட் டோன்றுமென்
னுள்ள முடைக்கும் படை "

என்ற குறளில் கூறியிருக்கிறார்.

மனத்தின் உன்னுதல் (Will) தொழிலை

" ஊடலுணங்க விடுவாரோ டென்னெஞ்சங்
கூடுவே மென்ப தவா "

என்றதால் பெறப்படும்.

குணவுணர்ச்சியை (Emotion)

" மனநல மன்னுயிர்க் காக்க மினநல
மெல்லாப் புகழுந் தரும் "

என்ற பாட்டினின்றும் அறியலாம்.

" பெரூஅமை யஞ்சும் பெறிற் பிரிவஞ்சு
மரூஅ விடும்பைத்தென் னெஞ்சு "

என்பதிலிருந்து மனத்தின் அச்சத்தைப் பற்றிக் கூறிய துணர்கிறோம். மேலும் அவலம், கவலை, கோடு கொடேறுதல் முதலிய மனநிலைகளைப் பற்றியும் திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

" உரூஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செரூஅய் வாழிய நெஞ்சு "

என்று நெஞ்சை நகையாடிக் கூறுகிறார்.

" எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு "

என்ற செய்யுளிலும்

" ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து "

என்ற செய்யுளிலும் சொல்லியவற்றை உற்று நோக்குழி மனம் ஒரு நுண்ணிய உடல் போன்றிருப்பதை அறிகிறோம்.

" மனத்துக் கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற "

என்று உள்ளத்திற் குற்றமில்லாமையே பெரிய அறம் என்று உணர்த்துகிறார். மனக்கவலை யறுதல்தான் முடிந்த இடம் என்பதை,

" தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது "

என்ற செய்யுளில் அறிவிக்கிறார். திருஞான சம்பந்த சுவாமிகள் " நன்னெஞ்சே வுனை யிரந்தேன் " என்று கூறியுள்ளார்.

" ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டாப் பிறப்பு "

பேர்த்துள்ள வேண்டாப்பிறப்பு என்றதில் மனம் உண்மையை ஆராய்ந்து அதனை அனுபவத்தி லுணருமாயின் மீட்டும்

அவனுக்குப் பிறவியில்லை என்கிறார். இப்படியெல்லாம் ஆராய்ந்து பார்க்குமிடத்து உள நூல் திருவள்ளுவர் காலத்துக்கு முன்பேயிருந்திருத்தல் வேண்டும் என்பது ஒருதலை. மக்கள் அப்படியறிந்திருந்தால் தான் திருக்குறளைப் படிக்க எளிதாயிருக்கும்; திருவள்ளுவரும் இந்நூலை எழுதவும் நேர்ந்தது. முன்பு ஒருவர் "திருவள்ளுவரும் தாவர நூலும்" என்ற பொருள் பற்றிப் பெரியதொரு சொற்பொழி வாற்றியுள்ளார். அளவு நூல்(Logic) கருத்துக்களும் திருக்குறளில் காணக்கிடக்கின்றன. இன்னும் வேறுவகை நூற்கருத்துக்களும் அதில் அடங்கியிருக்கலாம். அறிஞர்கள் அதை ஆராய்ந்து வெளிப்படுத்தினால் பலர்க்கும் பயன்படும்.

சித்தாந்தம்.

ஊணருட் பயன்

[சிவகங்கை நா. பரிதிமலை]

(அருணாசலன்)

முன்னுரை

எழுத்தின் வகையறியா எளியேனுங் கசடன் "ஊணருட் பயன்" என்னும் பொருள்பற்றி யெழுதத் தொடங்கினமை யெனக்கே நகைச்சுவை தாராநிற்கின்றது. என்னை? பசுமை கண்டவிடத்தெங்கும் வாய்மடுத்துப் பசிப்பிணி யறுத தகரென யானும் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்லாசிரிய ரொருவரை யடுத்து வான்முறையாக நன்னூல் பலகல்லாமல் விழியிடத்துட்பட்ட பன்னூல்களையும் மீநோக்காக விளித்தமையானென்க. அன்றியும், படைக்கலமும் பயிற்சியுமில்லா னொருவன் அமர்க்களம் புகுந்திடர்ப்பட்டு இறுதியில் இன்னுயிர் நீத்தாலன்ன எய்ப்பினில் வைப்பாம் அருந்தமிழ்ச் "செல்விக்கு" நுழைமாண் புலமுடைப் பேரருட் பெருமாந்தர் பலர் அறிவொளிக் கட்டுரையாம் பொருளை யுவந்தளிக்கவும் அக்குழூஉ விடைக் கட்டுரைவன்மை யிலியாம் இவ்வேழையுங் கட்டுரைக்கப் புகுந்தமையுமாம். ஆயினும், அவா வென்னுந் திரையான் உந்தப்பெற்று அவாது அடிநிழலையே பின்றொடர்கின்றேனாகலின் வழியும் வழுக்காதென்னுந் துணிவு

" சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு "

என்றும் கூறியிருக்கிறார். ஆனால் இவைகள் மேற்சொன்ன ஐந்து பூதங்களின் குணங்கள் என்று கொள்ளுதல் கூடாது.

திருவள்ளுவர் தம் குறளில் மனம், நெஞ்சு என்றே அநேக இடங்களில் கூறியிருக்கிறார். மனதிற்கு நினைத்தது முடித்தல் (Thought power) என்னுங் குணம் உண்டென்பதை,

' எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின் "

என்னும் குறளிலும்,

" வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப
மற்றைய வெல்லாம் பிற "

என்னும் குறளிலும் சொல்லியிருக்கிறார்.

யான் முதலில் சைவசித்தாந்த கருத்துக்களுக்கேற்ப திருவள்ளுவர் மனதைப்பற்றிச் சொல்லியிருப்பதைக் கூறுகிறேன். முதலாவதாக, கலை, வித்தை, அராகம் என்ற தத்துவங்களை எடுத்துக் கொள்வோம். கலாதத்துவத்தை,

" மனத்தானும் மாந்தர்க் குணர்ச்சி யினத்தானும்
இன்னா னெனப்படுஞ் சொல் "

என்ற குறளில் அடங்கியிருப்பதைக் காணலாம். வித்தை தத்துவத்தை,

" மனத்து ளதுபோல காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு "

என்ற செய்யுளினின்றும் உணர்கிறோம்.

" உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல் "

என்ற குறட்பாவிலும்,

" உள்ளிய தெல்லா முடனெய்து முள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின் "

என்ற குறட்பாவிலும் அராக தத்துவத்தைப்பற்றித் தெரிந்து கொள்ளுகிறோம். உள்ளத்தால்தான் உள்ள முடியும்; கண், வாய் முதலியவற்றால் உள்ள முடியாதல்லவா?

இப்பொழுது காலம், நியதி என்ற இரண்டையும் எடுத்துக் கொள்கிறேன். ஒருவனுடைய மனத் தன்மையால்தான் காலத்தின் நன்மை, தீமை தோன்றும். இக்கருத்தையே ஆங்கில மகா கவியொருவர், "It is the mind that makes a heaven of hell and a hell of heaven" என்று கூறியிருக்கிறார்.

"மாலைநோய் செய்தன் மணந்தா ரகலாத
காலை யறிந்த திலேன்"

என்ற குறளில் மாலை இவ்வாறு துன்பஞ் செய்யும் என்பதைக் காதலர் பிரியாத காலத்தில் நான் தெரிந்து கொள்ளவில்லை என்று தலைவி கூறுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது முன்பு மாலை நன்றாகத் தோன்றியது; பின்பு அதே மாலை அப்படியில்லையென்ற கருத்தால், மனத்தன்மையால் கால வேறுபாடு தோன்றும் என்று அறிகிறோம். மற்றும்,

ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ் சேட்சென்றார்,
வருநாள் வைத்தேங்கு பவர்க்கு"

என்ற குறளிலும்,

"கொடியார் கொடுமையிற் றாங்கொடிய விந்நா
ணெடிய கழியுமிரா"

என்ற குறளிலும், தலைவி, தலைவன் பிரிந்த காலை காலம் நீடித்துத் தோன்றுவதாகவும், தலைவன் தன்னுடனுறையுங் காலம் நீடித்திருக்க வேண்டு மென்றும் கூறுகிறாள். இதுவும் மனத் தன்மையால் காலபேதம் தோன்றுவதைக் குறிக்கும். சுந்தர மூர்த்தி சுவாமிகள் புராணத்தில் "ஊழியாம் ஒரு கணந்தான் அவ்வூழி யொருகணமாம்" என்று கூறியுள்ளார் சேக்கிழார்.

நியதி என்பதைப்பற்றியெல்லாம் "ஊழ்" என்னும் அதிகாரத்தினின்றும் தெரிந்து கொள்ளலாம். ஏனெனில் "ஊழ்" நியதி என்பவை ஒருபொருளனவே.

இனி, மனத்தின் வேறு சில தத்துவங்களைப்பற்றி யுரைக்கிறேன்.

கொண்டு இக்கட்டுரையை வரைவேனாக இதனுட் போந்த விழுப் பொருளைப் பருகிப் பருப்பொருளை வடித்தொழுக்கி யருளுமாறு மேலோர் தமிணையடிகளைப் பெரிதும் இறைஞ்சுகின்றேன்.

தந்துரை

"ஊணருட்பயன்" என்னும் இச்சொற்றொடர் உம்மைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாம். இஃது முறையே உயிரும் உடலும் ஒன்றி நிற்றற்பொருட்டு உண்ணப் படும் உணவும், அவ்வுணவுப் பொருள்களினிடத்து உயிர்கட்கு உண்டாகும் அருளும், அப்பொருட்கு இரங்கி யெழுந்த அருளான் உயிருமுடலும் பெறும்பயனும் எனவிரியும். இவற்றுள் முதற் கணின்ற உணவுப் பொருள்களை யாராய்தற்கு முன்னர், அப் பொருள்களின் றன்மைகளையும், அப்பொருள்களையும் பொருள் களியங்குதற்குரிய உலகத்தினையும் உவந்தளித்த பேரருட்பெருங் கடலாம் இறைவனது உண்மை நோக்கத்தையும் விளக்கியல்லது நுதலிய பொருளிடைப் புகின் அறிவுடையோர்க்கன்றி யேனை யோர்க்குப் பயன்படாவாகலின், ஈண்டுச் சிறிது நோக்குவாம்.

உயிர்களின் தோற்றமும் பண்பும்

வீங்குகடலுடுத்த வியன்ஞாண் ஞாலத்துட் பாங்குடனமைந்த பல்பொருட்டொகுதி யனைத்தும் ஓங்கு புகழுடன் உலகினில் நடமிடும் உண்மை முற்றறிவினையுடைய ஓர் தனிமுதலாற் கருப்பை- முட்டை - மண்கிளத்தல் - வேர்வை யென்னும் நால்வகைத் தோற் றத்துள் அடக்கி, வானவர் - மக்கள் - விலங்கு - பறப்பன - ஊர் வன - நீர்வாழ்வன - மரமுதலிய - எழுவகைப் பிறப்புக்களாகவும் படைக்கப்பட்டனவாம். இவற்றுள் வானவர்முதல் நீர்வாழ்வன வீறாகவுள்ள அறுவகைப் பிறப்புக்களும் நடமாடுந்தன்மையவாக லின் இயங்கியற் பொருளென்றும், மரமுதலியன நின்ற நிலையினி ன்றும் பெயர்தலில்லனவாந் தன்மையவாகலின் நிலையியற் பொரு ளென்றுங் கூறப்படும். இப்பிறப்புக்களேழும் முறையே ஆறறிவு முதல் ஓரறிவு ஈறாக அறியுந்தன்மை வாய்ந்தனவாம். அவற்றுள் புல் மரமுதலியன நீர்வீழ்ந்தக்கால் தம்முடலைக் காத்தற்பொருட்டு நீரையுறிஞ்சும் அறிவொன்றனையே யுடையதாகும். நீர்வாழ்வன வற்றுள் இப்பி சங்கு முதலியன உடலைக் காத்தற்கு உண்ணப்படும் உணவை நாவாற் சுவைத்தறிதலையுங் கொண்டு ஈரறிவினையுடையன

வாகும். ஊர்வனவற்றுள் கறையான் எறும்பு முதலியன அவற்றொடு மூக்கால் நாற்றத்தையும் உடனறியுந் தன்மையினவாய் மூவறிவுயிராம். பறப்பனவற்றுள் தும்பி வண்டு முதலியன மேற்கூறியவற்றோடு கண்ணாற் பிறபொருளின் வடிவத்தையுங் கண்டறியுந் தன்மையினவாய் நாலறிவுயிராம். வானவரும் மக்களும் நாகருமாகிய மக்கட்பிறப்பினரும் களிறு முதலிய விலங்கின் பிறப்புக்களும் பறக்குந்தன்மையினவாம் புள்ளினங்களும் பிறவும்மேற்குறித்த நால்வகையறிவோடு செவிப்புலனால் ஒலிநுட்பத்தையுமுடனறியும் தன்மை வாய்ந்த ஐயறிவினை யுடையனவாம். ஈண்டு ஓரறிவுமுதல் ஐயறிவு ஈறாக வேறுபடுத்துக்கூறிய அறிவென்றது உடற்குறுவதையறிவதும், நாவினால் அறுவகைச் சுவைகளையும் சுவைத்து அறிவதும், நாசியால் தூமணம் தீமணம் என நாற்றத்தை நுகர்ந்தறிவதும், விழியினொளியால் உலகினுட்பட்ட பொருள்களனைத்தையும் கண்டறிவதும், செவிப்புலனால் பல்லியங்களையும் பல்லிசைகளையும் பல்வேறுவகைப்பட்ட ஒலிநுட்பங்களையும் கேட்டறிவது மாகிய, அறியுந்தன்மையையேயாம். மக்கள் விலங்கு புள் என்னு மூன்றுமல்லாத எஞ்சிய நால்வகைப் பிறப்புக்களுக்கும் முறையே ஐந்தின் கீழ்ப்பட்ட அறிவினையுடைய தென்றது அவ்வவற்றின் உறுப்புக் குறைவையேயாகும். உலகிடைக்காணப் பெறும் பொருள்களனைத்தும் - தோன்றலும் - மறைதலும் ஆகிய இயல்பினையுடைய தென்பது யாவருமறிந்த தொன்றே. இவற்றுள் உடலாங்கூடொன்றே பிறப்பதும் இறப்பதுமாகிய இயல்பினையுடைத்தாகும். உயிரோ என்றும் அழியாத்தன்மையினதாய் நீட்டித்து நிற்பதாகும். மேற்கூறிய ஐவகை யறிவோடு மெய்ப்பொருளிது பொய்ப்பொரு ளிதுவெனப் பகுத்தறியும் பண்பு மக்கட்பிறப்புக்கே யுரித்தாகும். இதுபற்றியே மக்கட்பிறப்பை உயர்திணை யென்றும், ஏனைய எல்லாவற்றையும் அஃறிணை யென்றும் தமிழ் இலக்கணம் விதந்தோதாநிற்கும். அப்பகுத்தறிவினைப் பெற்ற மக்களாய்ப் பிறந்த நாம் அதன்வழி நில்லோமாயின் மேலோரால் மாக்களினத்தொடு சேர்த்தெண்ணப்பட்டு இழிபிறப்பாளராகவே கருதப்படுவோம். உயிரும் உடலும் ஒன்றி நின்றுழி எல்லாவற்றையும் அளந்தறியும் அறிவும் அறிந்தவிடத்து அப்பொருள்களினிடத்து உண்டாம் விழைவும் விழைவான் வரும் அருள் - அச்சம் - மானம் - நிறை - பொறை - ஓர்ப்பு - கடைப்பிடி-

மையல் - நினைவு - வெறுப்பு - உவப்பு - இரக்கம் - நாண் - வெகுளி - துணிவு - அழுக்காறு - அன்பு - எளிமை - எய்ப்பு - துன்பம் - இன்பம் - இளமை - மூப்பு - தோல்வி - வெற்றி - பொச்சாப்பு - ஊக்கம் - மறம் - வெறி - மறதி - என வேறுபட்ட முப்பத்திருவகை நிகழ்ச்சிகளும் - உயிர்க்குண்டாம் பண்பென்றும்; தோன்றல் - மறைதல் - வளர்தல் - சுருங்கல் - நீங்கல் - அடைதல் - நடுங்கல் - இசைத்தல் - ஈதல் என்பனவாய நிகழ்ச்சிகள் ஒன்பதும் உடற்குரிய தொழிலென்றுங் கூறுப. இதுகாறுங் கூறியவாற்றால் பொருள்களின் தன்மையையும் அதற்குரிய தொழில்களையும் அவையெல்லாம் ஓர் முதல்வனால் படைக்கப்பட்ட தென்பதையும் ஒருவாறு துணிந்தோம். இனி அம்முதல்வனின் உண்மை நோக்கத்தையும் சிறிது நோக்குவாம்.

இறைவனதுண்மை நோக்கம்

உலகியற் பொருள்களனைத்தும் ஓர் முதல்வனாற் படைக்கப்பட்டனவாயின் ஒன்றில் விருப்பும் மற்றொன்றில் வெறுப்புமுடையவனாக வேறு வேறுந்தன்மையினவாய்ப் படைக்கப்படுதற் கேதுவென்னையோ வெனிற், கூறுதும் :—

“ தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான்செய்த வினைப்பயன் துய்ப்பானும்
தானே தனக்குத் தலைவனு மாமே ”

—திருமந்திரம்

என்றபடி உயிர்கள் முற்பிறப்பிற் செய்த வினைகட் கேற்ப அதற்குரிய பிறப்புக்களும் வந்தடுத்ததே யன்றி இறைவனது விருப்பு வெறுப்பான் வந்தடுத்ததன்று. அஃதாவது தாயைக் காணாப் புனிற்றிளங்கன்று ஆனிரையைச் சென்றடைந்து அக்கூட்டத்துள் தன் தாயிடைச் சென்றணுகும் சேயைப் போன்றதாகும். முக்கட் செல்வனது முதலாய உண்மை நோக்கென்னையோவெனின், ஊழ்வினைப் பயனால் வந்தடுத்த புன்முதலாக ஒவ்வொரு பிறப்பும் தன்னின் மேலாய பிறப்புகளை நல்வினைப் பயனால் மேனோக்கிச் சென்று கிடைத்தற்கரிய மக்கட் பிறப்பையுமடைந்து அதன்பின் பிறப்பின் நோக்கத்தையும் அறிந்து அவனடி

நீழலை யடைந்து இடையறாத பேரின்பப் பெருவெள்ளத்தில் திளைத்திருத்தல் வேண்டுமென்பதே அவனது உண்மை நோக்க மாகும். இதுபற்றியே எல்லாம் வல்ல இறைவன்,

"அருக்கனிற் சோதி யமைத்தோன், திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன், திண்டிறல்
தீயின் வெம்மை செய்தோன், பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன், மேதகு
காலினூக்கங் கண்டோன், நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன், வெளிப்பட
மண்ணிற் திண்மை வைத்தோன்."

—திருவாசகம்

என்னும் பணிமொழியொடு சிவணுமாறு நாம் இனிதுறை தற்கு அழகிய மண்ணுலகினையும் நமது உடலுமுயிரும் ஓம்புதற் குரிய வளவிய பொருள்களையும் உலகியற் பொருள்களை விளக்கு தற்கு ஞாயிற்றையும் திங்களையும் அப்பொருள்களை யடுதற்குத் தழலையும் அப்பொருள்கள் அழிவுறாமல் தழைத்தற்குக் காரையும் வெப்பமுறின் ஆற்றுதற்கு இனிய தென்றலையும் அமைத்து நாமும் துன்பின்றி யின்புற வேண்டிப் பல காட்சிகளைக் கண்டு மகிழ்தற்குக் கண்களையும் இன்மொழிகளைக் கேட்டுக் களித் தற்குச் செவிகளையும் நறுமண மலைதற்கு நாசியையும் இன் சுவை யறிதற்கு நாவையும் மெய்யுற்று இன்பந்துய்த்தற்கு எழில் மிகு நங்கையரையும் தந்திலனேல் நாம் ஒருவாற்றானும் நிலைபெறு தற்கு ஒல்லுங்கொல்! இவை யித்தனையும் கருவிகளாக அமைத்து நம்மையும் அக்கருவியாம் கல்விப் பெருங்கடலைக் கற்றுத் தெளிந்து தேர்வு பெறவேண்டியே இவ்வுலகமாம் பலகலைக் கழகத்திற்கு நமது ஒப்பிலாத தந்தை அனுப்பியதுமாகும். இதன் உண்மை யறியாத புன்மக்கள் பலர் கைப்பொருள் ஒன்றுண்டாயின் உளம் சென்றவழி விடுத்து உன்மத்தராய்த் திரிந்து,

"துக்கத்துள் தூங்கித் துறவின்கட் சேர்கலா
மக்கட் பிணத்த சுடுகாடு—தொக்க
விலங்கிற்கும் புள்ளிற்குங் காடே புலன்கெட்ட
புல்லறி வாளர் வயிறு"

—நாலடி

என்பதை யொப்ப உண்பதும் உறங்குவதும் இன்பந் துய்ப்பது மாய பெருஞ் செயல்களே தனது உயர்பிறப்பின் பயனெனக் கருதிப் பாழடைகின்றனர். நல்குரவே தொல் விடமாக நைந்துழலும் கயவர் இன்பத்துள் திளைத்துச் செருக்குற்றுத் திரிவோரைக் கண்டு பொறாமை யென்னும் பேய் பிடித்தோராய் இடைவிடாது எம்பெருமானை வன்கணாளன் என்றும் நடுநிலைமையில்லாத நயப்புரைக்காரன் என்றும் தமது வாய்க்கு வந்தவற்றைப் பிதற்றி வலிகுறைகின்றனர்.

செல்வமென்னும் அல்லலையும் நல்குரவு என்னுந் தொல்லிடத்தையும் கல்வி யென்னும் பல கடலின் நீந்திக் கண்டறிந்த பான்மையாளரோ தெய்வ மென்பதோர் சித்தமுண்டாகித் துஞ்சலுந் துஞ்சலிலாத போழ்தினும் நெஞ்சகம் நைந்தழுது அரற்றிப்,

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேம்"

—திருவாசகம்

எம்பெருமானீர் இன்னும் பேரிடர்க்கட் படுவோமாயின் உய்யும் வழி யொன்றறியேமாய் உழல்வேமாகலின் இது போழ்து நின்னை யணுகும் விழைவால்,

"ஊடுவ துன்னோ டுவப்பது முன்னை
யுணர்த்து வது உனக்கெனக் குறுகி
வாடினேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் று அருள்புரி யாயே"

—திருவாசகம்

எனப் பாடிப்புகழ்ந்து பிறப்பு இறப்பு என்னும் மாமரத்தின் வேர் பறித்தெறிந்து பிறையணியும் பிஞ்ஞகன்றன் பேரருளைப் பெற்றுப் பேரின்பப் பெருமிதம் எய்துகின்றனர்.

—(தொடரும்)

அருஞ்செய்யுட் பொருட் பகுதி

புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம்

86-வது செய்யுள்.

[சென்னை கோ. இராமலிங்கத் தம்பிரான் அவர்கள்]

கலி-எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

அத்தியின்மே லரசிருக்கு மரசின் மீதே
  யாத்திபனை வேம்பிருக்கு மவையின் மீதே
நித்தியமு மாவிருக்கு மயக்க மின்றி
  நிச்சயமா யறிந்துரைத்த களிய ரப்பா
சித்திவிநா யகன்மூத்த தமைய னீசன்
  திருமடந்தை தலைமகன்மா யவனே யாகு
முத்தயன்வே ளூரர்மரு மகனென் பார்கண்
  முகுந்தனுக்குக் காமனண்ணன் முறைகண் டாயே.

இதன் பொருள்: அத்தியின் மேல் - அத்திமரத்தின்மேல், அரசு இருக்கும் - அரசமரம் முளைத்திருக்கும், அரசின் மீதே - அவ்வரச மரத்தின் மேலே, ஆத்தி பனை வேம்பு இருக்கும் - ஆத்திமரமும் பனைமரமும் வேப்ப மரமும் முளைத்திருக்கும், அவையின் மீதே - அவ்வாத்தி முதலிய மரங்களின்மேலே, நித்தியமும் - எப்பொழுதும், மா இருக்கும் - மாமரம் முளைத்திருக்கும், மயக்கம் இன்றி - மயக்கமில்லாமல், நிச்சயமாய் - உண்மையாய், அறிந்து - தெரிந்து, உரைத்த - (இவைகளைச்) சொல்லிய, களியர் - கட்குடியர் (யாங்கள்) அப்பா - அப்பனே! (இன்னும் கேள்). சித்திவிநாயகன் - சித்தி விநாயகப் பெருமானுக்கு, மூத்த தமையன் - பெரிய அண்ணன், ஈசன் - சிவபெருமானாகும், திருமடந்தை - திருமகளுக்கு, தலைமகன் - முதல் மகன், மாயவனே ஆகும் - திருமாலே யாகும், முத்தயன் - முத்துக்குமார சுவாமியை (முருகனை) வேளூரர் - வேளூரில் எழுந்தருளிய வைத்தியநாதருக்கு, மருமகன் என்பார்கள் - மருமகன் என்று சொல்லுவார்கள், முகுந்தனுக்கு - திருமாலுக்கு, காமன் - மன்மதன், அண்ணன் முறை - அண்ணன்

முறையாகும்; (எ - று.) கண்டாய் - முன்னிலையசை. இங்ஙனம் முறை பிறழக்கூறினது கட்குடியின்றன்மை.

உள்ளுறைப் பொருள் : அத்தியின்மேல் - யானையின்மேல், அரசு இருக்கும் - சேர சோழ பாண்டியர் என்னும் அரசர்கள் இருப்பார்கள், அரசின் மீதே - அவ்வரசர்களின் மேலே, ஆத்திமாலையும் பனைமாலையும் வேப்ப மாலையும் அணியப்பட்டிருக்கும், அவையின் மீதே - அம்மாலைகளின் மேலே, நித்தியமும் - எப்பொழுதும், மா இருக்கும் - வண்டுகள் மொய்த்துக் கொண்டிருக்கும், மயக்கம் இன்றி - மயக்கமில்லாமல், நிச்சயமாய் - உண்மையாய், அறிந்து - தெரிந்து, உரைத்த - (இவைகளைச்) சொல்லிய களியர் - கட்குடியர் (யாங்கள்); அப்பா - அப்பனே !, (இன்னும் கேள்) சித்தி விநாயகன் - சித்தி விநாயகப் பெருமானுக்கு, மூத்த தம் ஐயன் - பழமையான தமது பிதா, ஈசன் - சிவபெருமானும், திருமடந்தை - திருமகளுக்கு, தலைமகன் - நாயகன், மாயவனே ஆகும் - திருமாலே யாகும், முத்தையன் - முத்துக்குமார சுவாமியை (முருகனை), வேளூரர் - வேளூரில் எழுந்தருளிய வைத்திய நாதருக்கு, மருமகன் என்பார்கள் - (அன்பு)பொருந்திய மகன் என்று சொல்லுவார்கள், முகுந்தனுக்கு - திருமாலுக்கு, காமன் - கற்பகச் சோலைக்கு அரசனாகிய இந்திரன், அண்ணன் முறை - அண்ணன் முறையாகும்; (எ-று.)

இது கலம்பகத்தின் உறுப்புகளுள் ஒன்றாகிய களி என்பதாம். கட்குடியர் தாம் குடித்த கள்ளின் சிறப்பை எடுத்துச் சொல்வதாகச் செய்யுள் செய்வது. கட்குடியர் கட்குடித்தும் மயங்கியும் சொல்வது உண்மையென்று இச் செய்யுளால் வலியுறுத்துகின்றார். அப்பா என்பது கட்குடியர், முனிவர் முதலியோர் விளிப்பதோர் சொல் விழுக்காடு (பரிபாஷை).

தமிழ் மொழியின் ஒலிகளும் எழுத்தும்

[ஈப்போ. திரு. தியாகராயன் அவர்கள்]

முன்னுரை

வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியார் எழுதிய தமிழ் மொழியின் வரலாறு என்னும் நூலில் (ப. 66) "ஆங்கிலம் முதலிய பிற பாஷைகளின் போலாது தமிழ் உயிரெழுத்துக்களின் வைப்பு

முறையும், மெய்யெழுத்துக்களின் வைப்பு முறையும் ஆகிய இவ் விரண்டும் மிக நேர்த்தியான ஒழுங்குடையனவாய் ஓசை நூன் முறை அணுவளவும் பிறழாமல் ஏற்பட்டிருக்கின்ற தன்மை யாவரும் வியக்கத்தக்கதே" என்று கூறியுள்ளார்.

ஆனால் நம்மொழி எவ்வாறு ஓசை நூன்முறை அணுவளவும் பிறழாமல் ஏற்பட்டிருக்கிறதென்பது பல நூல்களில் ஆங்காங்கு எடுத்துரைக்கப்பட்டிருப்பினும் ஒருங்கே ஓர் கட்டுரையாக விருப்பதை நான் காண்கிலேன். ஆகையால் அத்தன்மையைத் தொகுத்துரைக்கவும் மேற்கூறிய சான்றோர் அந்நூலின் 67-ம் பக்கத்தில் "எனவே முன்னர்க் கூறிய ஆறு ஓசைகளோடு இந்த மூன்று புதிய ஓசைகளையுங் கூட்ட வெழும் ஒன்பது ஓசைகளும் மிக்க தமிழ் ஓசைகள். ஒவ்வோரொலிக்கும் ஒவ்வோரெழுத்திருத்தலே நியமம். அவ்வாறன்றி ஒரெழுத்தால் இரண்டு மூன்று ஒலிகளைக் குறித்தல் நேரிதன்று. அது பாஷையின் குறையே" எனவும் கூறியுள்ள குறையை நீக்கி நேர்படச் செய்வ தெவ்வாறென்பதைக் காட்டவும், இன்னும் தற்காலத்திற் கேற்பப் புத்தொலிகளைப் புகுத்தி நம்மொழியைச் சிறப்பிக்க வேண்டுமென்னும் அவாவினால் தூண்டப்பட்டும் இச்சிறு கட்டுரை வரையலாயிற்று.

ஒலியின் பிறப்பு

How Voice is produced

"In producing voice, the vocal chords do not vibrate like strings, nor like thin membranes that swing in the breath current and set the air in vibration, as often formerly supposed, but like two cushions or pads which by alternate compression or relaxation close and open the slit, the larynx thus emitting puffs of air, as Siren does, with sufficient rapidity to make a tone" (Webster, dic. Introduction para 30).

இதையே "மொழிமுதற் காரணமாம் அணுத்திரள் ஒலி எழுத்து" (பவணந்தி எழு. சூ. 57) எனக் கூறியுள்ளார்.

இதில் அணுத்திரளே ஒலி யென உணர்ந்து ஓதியுள்ளது நம் முன்னோரின் உண்மை ஆராய்ச்சியை உணர்த்துகின்றது.

Articulation

உச்சரிப்பு அல்லது எழுத்தின் பிறப்பு

"All articulate sounds are produced by effort, by expenditure of muscular energy in the throat, lungs and mouth" (Papillon P. 28)

இதையே இன்னும் தெளிவாக "நிறையுயிர் முயற்சியினுள் வளிதுரப்ப எழுமணுத்திர ளுரங் கண்ட முச்சி மூக்குற் றிதழ் நாப்பல் லணத்தொழிலின் வெவ்வே றெழுத்தொலியாய் வரல் பிறப்பே"

என்று பவணந்தியார் கூறியுள்ளார் (எழு. சூ. 73)

இவ்வாறெழும் ஒலிகள் உயிர், மெய்யெனப் பகுக்கப் பட்டன. அவற்றுள் :—

Vowels

உயிர்

"Modification of the stream of the vocal sound, without interruption or compression by the organs of the mouth, produces vowels, so called because they have a sound of their own, being various modifications of the vocal sound produced by the "Chorda Vocales." All vowels, therefore, are soft sounds". (Papillon P. 30)

"The sounds by simple voicing of the breath are the vowels or open sonorous sounds of the language, which are capable of conveying meaning to the ear without being joined to other sounds" (Guide to the English Language—Austin K. Grey)

உயிரெழுத்துக்கள் இவ்வாறு எழுத்தொலிகளுக்கு முதலொலிகளாகவும் அம்முதலொலிகளின் வேற்றுமைகளாகவும் தன்னந் தனியா யியங்குந் தன்மை யுடையனவாயும் பொருள் உடையனவாயுமிருத்தலால் இவ்வொலிகளுக்கு உயிரெனப் பெயரிடப் பட்டிருக்கிறது.

" அவ்வழி ஆவியிடைமை யிடமிடறாகும்" எனக் கூறப்பட்டன (பவணந்தி எழு. சூ 74) அதாவது கண்டத்தில் பிறக்கும் ஒலிகளென வுணர்த்தப் பட்டது.

The Arabians designate vowels as "motion" and consonants as "barrier".

The Possible Vowel Sounds

உயிரொலிகளின் தொகையும் விரியும்

ஓசைநூன்முறைப்படி முப்பத்தாறு உயிரோசைகள் ஒலிக்கக் கூடுமென **Austin K. Grey** கூறுகின்றார். அவை யாவன:—

1. நாக்கைப் பின்னிழுப்பதால் உண்டாகும் ஓசைகள்.
   a கொஞ்சம் பின்னிழுப்பதால் உண்டாகும் உயிர் (Front Vowels).
   b பாதி யிழுப்பதால் வரும் உயிர் ஓசை (Mixed Vowels)
   c முற்றும் இழுப்பதால் வரும் ஓசை (Back Vowels)
2. நாக்கை வளைப்பதால் வரும் உயிர் ஓசைகள்
   a கொஞ்சம் வளைப்பதால் வரும் உயிர் ஓசை (Low Vowels)
   b பாதிவளைப்பதால் வரும் உயிர் ஓசை (Middle Vowels)
   c முற்றும் வளைப்பதால் வரும் உயிர் ஓசை (High Vowels)
3. a நாக்கைத் தளர்த்துவதால் உண்டாகும் உயிரோசைகள் (Slack Vowels)
   b நாக்கை இறுக்கிப் பிடிப்பதால் உண்டாகும் உயிரோசைகள் (Tense Vowels)
4. a உதடுகளை குறுக்குவதால் உண்டாகும் உயிரோசைகள் (Unrounded Vowels)
   b உதடுகளை அகலத் திறப்பதால் உண்டாகும் உயிரோசைகள் (Rounded Vowels)

இவ்வாறாக நாக்கு உதடுகள் இவைகளின் இயக்கங்களால் முப்பத்தாறு உயிரோசைகள் எம்மொழியிலும் ஒலிக்கக்கூடுமென அன்னார் கூறுகிறார். எனினும் ஆங்கிலத்தில் வழங்கும் உயிரோசைகள் பதினேழு எனக்கூறுகிறார். இதுபோல Chambers அகராதியின் நூலாசிரியர் பதின்மூன்று ஒரெழுத் துயிரொலிகளும் நான்கு ஈரெழுத் துயிரொலிகளுமாகப் பதினேழு உயிரோசைகள் குறித்துள்ளார் (Explanation to student Twentieth Century Dictionary).

தமிழின் உயிரொலி

அ. ஆ.

" அவற்றுள்
முயற்சியுள் அ ஆ வங்காப்புடைய" (பவணந்தி எழு. சூ. 75)

அஃதாவது அகரம் உள்வளி தூப்ப மிடற்றினின் றெழுலிக்கும் முதல் உயிராகும். இக்காரணத்தாலேயே "அகர முதல வெழுத் தெல்லாம்" என்றனர் திருவள்ளுவரும்.

அகரத்தின் நெட்டொலி ஆகாரம்.

இ. ஈ.

அகர வோசையி லுற்பத்தியாகி வெளிவரும் காற்றின் வழியை (Passage) அடி நாக்கினால் மேல்வாய்ப் பற்களின் விளிம் புறப்பொருந்த உண்டாகும் உயிரோசை இகரம் (i. e. the passage is reduced by the approximation of the base of the tongue and the edges of the upper molars).

உ. ஊ.

இவ்வோசைகள் அகர வோசையிலுற்பத்தியாய் அவ்வோசை வெளிப்படும் வழியின் கடையாகிய உதடுகளைக் குறுக்குவதால் உண்டாகும் உயிரொலிகள்.

ஒ. ஓ.

மேற்கூறியவாறு ஓசை யுற்பத்தியாய் உதடுகளை அகலத் திறந்து வழியைப் பெரிதாக்குவதால் உண்டாகும் உயிர் ஒலிகள்.

எ. ஏ.

இவை அகர இகரங்களின் இணையொலிகள் Diphthongs; அதாவது அகரத்தின் ஒலி மேல் இகரத்தின் ஒலியை இணைத்து அதிலும் இதிலும் பாதி பாதி ஓசைகளைக் கூட்டி ஒலிப்பதால் வரும் உயிரொலிகள். இவ்விணையொலிக்கு உதாரணமாக German மொழியில் A என்பது அகர ஒலியுடையது. E என்பது இகர வொலியுடையது. ஆனால் இவ்விரு வெழுத்துக்களையும் Æ என இணைத்து வரையின் எகரவொலி யுடையதாகும். இவ்வொலிகள் Net, Fate என்னும் ஆங்கிலச்சொற்களிலுள்ள எகர, ஏகாரங்கள் போல் குறிலும் நெடிலுமாய் ஒலிப்பன,

இக்கூறுபாடுகளை எடுத்துக்காட்டியே "இ ஈ எ ஏ ஐ யங் காப்போ டண் பன் முதலு விளிம்புற வருமே" என்றும் "உ ஊ ஒ ஓ ஔ விதழ்குவிகவே" என்றும் கூறியுள்ளார் பவணந்தி. (எழு. சூ. 76, 77).

ஐ.

இவ்வெழுத்தொலி அகர இகரங்களை இடைவிடாது அடுத் தடுத்தொலிப்பதால் உண்டாகும் உயிர் ஒலி. ஐகாரம் அகர இகரங் களின் புணர்ச்சியென்பது இவ்வெழுத்தை நெட்டெழுத்தோடு சேர்த்ததாலும் அளபெடுக்குழி இகரமே இனக்குறியாய் நிற்ற லாலும், ஐகாரங் குறுகுங்கால் கடையொலியாகிய இகரம் நீக்கப் பட்டு எஞ்சி நின்ற ஒலி அகரமாகுவதாலும் உணர்ந்தறியலாம். இவ்வகர வெழுத்தால் உணர்த்தப்படுவதை "அய்யன்" "தய்யல்" என்னுஞ் சொற்கள் விளக்கும். இவ்வெழுத்தை மெதுவாக உச்ச ரிக்க நன்கு விளங்கும்.

ஔ.

இவ்வுயிரோசை அகர உகரங்களை இடைவிடாது அடுத் தடுத்து உரைப்பதால் உண்டாகும் ஈரெழுத்தின் தொகையாய் இருமாத்திரை யுடையதா யிருப்பதால் ஐகாரத்தைப்போல் இது வும் நெடிலோடு சேர்க்கப்பட்டது. அன்றியும் அளபெடுக்குங்கால் உகரத்தை இனக் குறியாகப் பெறுவது. மற்று அஃகுங்கால் ஈற் றொலி கெட்டு முதலொலி நிலைத்து 'அவ்வியம்' 'அவ்வை' என் னும் சொற்களில் அகர ஓசையுடன் இயங்கிற்று.

The digraph a i in words of foreign origin and of recent adoption often has the sound of ai or i as in Kaiser (i.e) kiser கைசர் ainu (i.e) Inoo (ஐ னூ). எனவே சில ஐரோப்பிய மொழிகளில் குற்றிகரமும், குற்றுகரமும் இணைத் தொலிப்பின் ஐகாரம் போல் ஒலிக்கின்றது.

ஔகாரம் ஆங்கிலத்தில் O W என்னும் ஈரெழுத்தால் குறிக்கப்படுகிறது. (உ-ம்) Now, How. சில சமயங்களில் O U என்னும் எழுத்துக்களால் குறிக்கப்படுகிறது (உ-ம்) House. Short a + u—in words from the German, and most other languages, has the sound of ஔ as in 'out.'

—(தொடரும்)

பதிற்றுப்பத்து விளக்கம்

[பண்டிதர் A. நடராஜபிள்ளையவர்கள்]

(கரு-ம் பக்கத் தொடர்ச்சி)

விருத்தியுரை

போகி - போக எனவும், தபுத்து - தபுக்க எனவும், ஓரீஇ - ஒருவ எனவும் திரித்துக் கொள்க. மேன - மேவின என்பதன் இடைக்குறை. துணங்கைக் கூத்து - இரு கைகளையும் முடக்கிப் பழுப்புடைகளில் ஒத்திக்கொண்டு ஆடல். அக்கால அரசியலில் கீழ்க்குடிகள், மேற் குடிகள் என இரு பிரிவினர்கள் குடிமக்களில் இருந்தன ரென்பதும், கீழ்க் குடிமக்களைக் காப்பாற்ற வேண்டிய கடமை மேற் குடிமக்களைச் சார்ந்த தென்பதும், மேற் குடிமக்களைக் காப்பாற்ற வேண்டிய கடமை அரசர்களைச் சார்ந்த தென்பதும் இப்பாட்டால் புலப்படுகின்றன. கரும்புகள் நடப்பட்டிருக்கும் பாத்திகளிலே பூத்திருக்கும் நெய்தற் செடிகள் பெரிய கண்களையுடைய எருமைகளை அவற்றுக்குப் பிரியமான கரும்புச் செடிகள் முதலிய மற்ற இரைகளைத் தின்னவிடாது, தம்மையே தின்னும்படி தடுக்கும் வளமுடையன என்று கூறிய சிறப்பான் இதற்குப் பூத்தநெய்தல் என்று பெயர் கொடுக்கப்பட்டது. 'கூற்றடூஉ நின்ற யாக்கை - (மரண வேதனையுறு முடல்) ஒருகாலைக் கொருகால் அழுகழிந்து கெடுவதுபோல நாடு கவினழிய,' எனக் கூட்டுக. 'ஆரல் மீன்கள் புரண்டோடித் திரியும் நிலைமையினையும், உழாது விதைக்கப்படு நிலைமையினையும், தம்மையே தின்னும்படி தடுக்கும் நிலைமையினையும், முதிய பசுக்கள் மேய்கின்ற நிலைமையினையும், தென்னைமரங்களையும், மருதமரங்களையும், வாய்க்கால்களையும், தடாகங்களையு முடைய நாடு,' எனக் கூட்டுக. புறந்தராஅ - செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். செவ்வாய் என்னும் கோள் சேர்ந்துள்ள இராசியிலே சுக்கிரன் சேர்ந்திருந்தால் மழையின்றி நாட்டில் பஞ்சமுண்டாமென்பது சோதிடநூலின் துணிபு. இப்பாட்டால் சேரலாதனது வெற்றிச் சிறப்பும், அரசியல் அமைப்பும் கூறப்பட்டன.

பொழிப்புரை

பெருமானே! இயமன் கொல்கின்ற உடல் ஒருகாலைக் கொருகால் அழுகழிந்து கெடுவதுபோல, பொலிவு மிகுந்த வயல்

களில் ஆரல் என்ற ஒருவகை மீன்கள் புரண்டோடித் திரியும் நிலைமையினையும், காளைகள் நின்று போர் செய்தமையினாலே வளப் பட்ட சிறுவயல்கள் உழவுத் தொழிலை வேண்டாமலே விதைக் கப்படு நிலைமையினையும், கரும்புகள் நடப்பட்டிருக்கும் பாத்தி களிலே பூத்திருக்கும் நெய்தற் செடிகள் பெரிய கண்களையுடைய எருமைகளைத் தமக்குப் பிரியமான கரும்புச் செடிகள் முதலாகிய இரைகளைத் தின்னவிடாது தம்மையே தின்னும்படி தடுக்கு நிலை மையினையும், பெண்கள் ஆம்பற்பூக்களை யணிந்து ஓசை மிகும்படி துணங்கைக்கூத்து ஆடிய இடங்களிற் கிடக்கும் ஆம்பற் (குமுதப்) பூக்களை முதிய பசுக்கள் குனிந்த தலைகளோடு கூடியனவாய்த் தின்னுகின்ற நிலைமையினையும், சலசலப்பினையுடைய தென்னை மரங்களையும், பறவைகள் தங்கியொலிக்கின்ற மருத மரங்களையும், நீர்வளமிக்க வாய்க்கால்களையும், அழகிய பொய்கைகளையும், புலவர் களால் சிறப்பித்துப் பாடப்பட்ட வருவாய்மிக்க ஊர்களையுங் கொண்ட உனது எதிரியினுடைய நாடுகள் அழகு கெடும்படி நீ கோபித்து, அவைகளுக்கு அச்சத்தை யுண்டாக்கித் தங்கிய, வெள் ளத்தால் மட்டும் அழியக் கூடியனவும், பகைவர்களால் அதுவரை அழியாதனவுமாகிய துறைமுகத்தையும், அரசனிருப்பிடத்தையும் கொண்ட பெரிய ஊர்கள், மலர்ந்த பூக்களையுடைய கரும்புகள் நிறைந்த வயல்கள் அற்பமாய் அழிந்து போகவும், திரிபோன்ற காய்களையுடைய விடத்தேர் என்ற ஒருவகை மரங்களுடனே மேகங்கள் ஒழிந்து போகவும், இரட்டை மண்டைகளையுடைய பெண்பேய் பிசாசின்மீது சவாரிசெய்து சஞ்சரிக்கவும், படர்ந் துள்ள நெருஞ்சி முட்கள் நெருப்பிற்பட்டனபோல் பொடியாய்ப் போன போர்க்களத்தை யுடையதும், பொடியாகிய எரு நீங்கப் பெற்றதும், எவ்விதமான ஒலியும் இல்லாததுமாகிய களப்பலி கொடுக்கும் கோயிலிலே, மனமானது புகுவதற்கு வலியின்றிப் பின்வாங்கவும், தமது கரும வேட்கையினாலே புகுவதற்கு மேற் கொண்டவருடைய வலிமையினைக் கெடுத்தபடியினாலே, பின்னும் போக நினைப்பவர்கள் நடுங்குதற்குக் காரணமான பாழ் நிலங்க ளாயின.

உனது ஆளுகையின் கண்ணுள்ள நாட்டின்கண்ணே பெருங் காடான இடங்களிலெல்லாம் தெய்வங்கள் எழுந்தருளியுள்ள கோயில்கள் உண்டாயின; சிறு காடான இடங்களிலெல்லாம்

ஆபரணங்களை யணிந்த பெண்களுடனே நின்படை வீரர்கள் தங்கியுறையும் இடங்களாயின; பெருங்காடும், சிறுகாடு மல்லாத பெருவழிகள் வழிப்பறிக் கொள்ளைகளும், மற்ற இடையூறுகளு மின்றி, அப் பெருங்காடுகளையும். சிறுகாடுகளையும் போன்று தெய்வங்கள் எழுந்தருளியுள்ள கோயில்களும், படைவீரர்கள் தங்கி யுறையு மிடங்களுமாயின, மேலும், நீ காத்த நாடு, உலகத்தில் தானியம் விற்பவர்களும், தங்கீழ்க் குடிகளுமாகிய வரிசையாளரைக் காப்பாற்றும்படியான மேற் குடியாளருடைய துன்பங்கள் நீங்கப் பெற்று, செவ்வாய் என்னும் கிரகம் சேர்ந்துள்ள இராசியிலே சுக்கிரன் என்னும் கிரகம் சென்று பஞ்சம் உண்டாகாமல், மழை பெய்யவேண்டிய இடங்களில் நன்றாய்ப் பெய்து, நோய்களுடனே பசிப்பிணி விட்டு விலகப் பொலிந்து விளங்கியது.

புதிய நடை

பெருமானே! கூற்றுவன் கொல்கின்ற உடல் ஒருகாலைக் கொருகால் அழகழிந்து கெடுவதுபோல, நீ உனது எதிரிகளின் நாடுகள் அழகழிந்து கெடும்படி கோபித்தாய். அந்நாடுகளோ, பொலிவு மிகுந்த வயல்களில் ஆரல் என்ற ஒருவகை மீன்கள் புரண்டோடித் திரியும் நிலைமையினையும், காளைகள் நின்று போர் செய்தமையினாலே, வளப்பட்ட சிறுவயல்கள் உழவுத் தொழிலை வேண்டாமலே விதைக்கப்படு நிலைமையினையும், கரும்புகள் நடப் பட்டிருக்கும் பாத்திகளிலே பூத்திருக்கும் நெய்தற் செடிகள் பெரிய கண்களையுடைய எருமைகளை அவைகட்கு விருப்பமான கரும்புச் செடிகள் முதலிய இரைகளினிடத்தே புகவிடாது, தம் மையே தின்னும் வண்ணம் தடுக்கும்படியான நிலைமையினையும், பெண்கள் ஆம்பற்பூக்களை யணிந்து ஓசை மிகும்படி துணங்கைக் கூத்தாடிய இடங்களிற் கிடக்கும் ஆம்பற் (குமுதப்) பூக்களை முதிய பசுக்கள் குனிந்த தலைகளோடு கூடியனவாய்த் தின்னுகின்ற நிலை மையினையும், சல சலப்பினையுடைய தென்னை மரங்களையும், பறவை கள் தங்கி யொலிக்கின்ற மருத மரங்களையும், நீர் வளமிக்க வாய்க் கால்களையும், அழகிய பொய்கைகளையும், புலவர்களாற் சிறப்பித் துப் பாடப்பட்ட வருவாய்மிக்க ஊர்களையும் கொண்டனவாகும்.

நீ, வெள்ளத்தால் மட்டும் அழியக் கூடியனவும், பகைவர்க ளால் அதுவரை அழியாதனவுமாகிய துறைமுகத்தையும், அரச

ணிருப்பிடத்தையும் கொண்ட பெரிய ஊர்களில், அந்நாடுகள் அஞ்சும்படி தங்கினாய். அவ்வளவில், அப் பெரிய ஊர்கள், மலர்ந்த பூக்களையுடைய கரும்புகள் நிறைந்த கழனிகள் அற்பமாய் அழிந்து போகவும், திரிபோன்ற காய்களையுடைய விடத்தேர் என்ற ஒருவகை மரங்களுடனே மேகங்கள் ஒழிந்து போகவும், இரட்டை மண்டைகளையுடைய பெண்பேய் பிசாசின்மீது ஊர்ந்து திரியவும் பெற்றுப் பாழ் நிலங்களாயின. அப் பாழ்நிலங்கள் படர்ந்துள்ள நெருஞ்சிமுட்கள் நெருப்பிற் பட்டனபோல், நீறாய்ப்போன போர்க் களத்தினையும், பொடியாகிய எரு நீங்கப் பெற்று, எவ்விதமான ஒலியுமில்லாத களப்பலி கொள்ளும் கோயிலினையும் கொண்டிருந்தன. அக்களப்பலி கொள்ளும் கோவிலானது புகுவதற்கு வலியின்றி மனம் பின் வாங்கவும், தமது கரும வேட்கையாற் புகுதலை மேற்கொண்டவருடைய வலிமையினை நின் படையாளர் கெடுத்தபடியினாலே, பின்னும் போக நினைப்பவர்கள் நடுங்குதற்குக் காரணமாய் இருந்தது.

இனி, நினது ஆளுகையின்கண்ணுள்ள நாட்டிலே பெருங்காடான இடங்களிலெல்லாம் தெய்வங்கள் எழுந்தருளியுள்ள கோயில்கள் மிகுந்தன; சிறுகாடான இடங்களிலெல்லாம் ஆபரணங்களை யணிந்த பெண்களுடனே நின் படைவீரர்கள் தங்கி வாழ்க்கை நடத்தலாயினர்; மேற்கூறிய பெருங்காடும், சிறுகாடுமல்லாத பெருவழிகள் வழிப்பறிக் கொள்ளைகளும், மற்றைய இடையூறுகளுமின்றி, அவற்றினைப்போன்று தெய்வங்கள் எழுந்தருளியுள்ள கோயில்களும், படைவீரர்கள் தங்கியுறையும் இடங்களுமாயின. மேலும், நீ காத்த நாடு தானியம் விற்பவர்களும், தங்கீழ்க் குடிகளுமாகிய வரிசையாளரைக் காப்பாற்றும்படியான மேற்குடியாளருடைய துன்பங்கள் நீங்கப் பெற்றது; செவ்வாய் என்னுங் கோள் சேர்ந்துள்ள இராசியிலே வெள்ளி என்னுங் கோள் சென்று பஞ்சம் ஏற்படாமல், மழை பெய்யவேண்டிய இடங்களில் நன்றாய்ப் பெய்யப் பெற்றது; நோய்களுடனே பசிப்பிணி விட்டுவிலகப் பரந்து பொலியப் பெற்றது.

(தொடரும்)

பண்டைத் தமிழ்ச் சொற்கள்

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள்]

செல்வம் (24)

1. செல்வம் என்ற தமிழ்ச்சொல் பண்டைத் தமிழ்மக்களால் இறைவனுக்கு இட்டு வழங்கப்பட்ட பெயர்களுள் ஒன்று. அச்சொல்லில் அடங்கியுள்ள கருத்துக்கள் இக்கட்டுரையில் இயன்றவாறு கருதப்படும்.

2. செல்வம் என்ற சொல் செல் என்ற பகுதியும் அம் என்ற பண்புப்பெயர் விகுதியும் சேர்ந்து ஆகியது. செல் என்ற நிலைமொழி லகர மெய்யீற்றின்முன் அம் என்ற வருமொழி முதல் அகர உயிர் வர உடம்படு மெய்யல்லாத வகரம்தோன்றிச் செல்வம் என வந்தது, செல்வுழிச்செல்க என்பதில் வகரம் தோன்றுதல்போல. செல்வம் என்ற சொல் முதற் பொருளாக செல்லும் தன்மையுடையது என்று பொருள்படும். அது ஆகு பெயராய்ச் செல்லும் தன்மையுடைய உலகப்பொருளுக்கு (Worldly Wealth) ஆயிற்று. செல்வன் அல்லது செல்வர் என்ற சொல்லையும் பண்டைத் தமிழர் இறைவனுக்கு இட்டு வழங்கி வந்தார்கள். செல்வம் என்ற சொல்லுடன் அன் விகுதி சேர்ந்து செல்வன் என்ற சொல்லும் அர் விகுதி சேர்ந்து செல்வர் என்ற சொல்லும் வந்தன. உலகப் பொருளானது ஒருவரிடத்தில் நிலையாயிராமல் சகடக்கால் உருளுதல் போல மாறி மாறிப் பலரிடத்திலும் செல்லுதலால் அதற்குச் செல்வம் என்ற பெயரைப் பண்டைத் தமிழர்கள் இட்டு வழங்கினார்கள். அப்பெயரை என்றும் மாறுதலடையாது ஒருபடித்தாயுள்ள இறைவனுக்கு அவர்கள் என்ன காரணத்தினாலிட்டு வழங்கினர் என்பதைப்பற்றி நாம் கருதுவாம்.

3. பண்டைத்தமிழர், மக்களாலடையப் பெறும் உறுதிப் பொருள்கள், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு என அறிந்திருந்தார்கள் என்பது திருக்குறள் முதலிய தமிழ் நூல்களால் நாம் அறிகிறோம். நான்கு உறுதிப் பொருள்களுள் பொருளானது அறத்தின்வழி ஈட்டப்படுதலானும் அறத்தின் வழிசெலவு செய்யப்படுதலானும் உலக இன்பத்துக்குக் கருவி

யாயிருத்தலானும் அறத்தின் பின்னும் இன்பத்தின் முன்னும் நடுவே வைக்கப்பட்டது. பொருள் நிலையில்லாததுபோல அதன் பயனாகிய உலக இன்பமும் நிலையில்லாதது என்ற உண்மையும் அவர்களியற்றிய நூல்களிற் கூறப்பட்டுள்ளது.

4. உறுதிப்பொருள்கள் நான்கனுள் மூன்றாவதாக வைக்கப் பட்டுப் பொருளினது பயனாக அடையக்கூடிய உலக இன்பமா னது மக்களால் உலகில் இடைக்காலத்தில் அடையும் இன்ப மாயும் நான்காவதாக வைக்கப்பட்ட வீடு முடிவிலடையும் நிலையான பேரின்பமாயு முள்ளன. ஆகவே, உறுதிப்பொ ருள்களுள் மூன்றாவதாகிய நிலையுதலில்லாத உலக இன்பமும் நான்காவதாகிய நிலையான வீட்டின்பமும் இன்பம் என்ற வகை யில் ஒன்றுபட்டுள்ளன. உலகிலுள்ள எல்லா உயிர்களும் துன் பத்தினின்று நீங்கி இன்பத்தை அடைதல் வேண்டும் என்ற வேட்கையை உடையன ; ஆயினும் அவைகள் அடையத்தகுந்த இன்பமானது அவைகளுடைய கருவி அறிவினது (உலக அறி வினது) தரத்தைப் பொறுத்துள்ளது. ஆறறிவுடையமக்கள் அடை யும் இன்பமும், பலபடித்தாய் அவர்களது கருவி அறிவு நிலையைப் பொறுத்துள்ளது என்பது நாம் கண்கூடாக உலகிற் காண்கிறோம். மக்கள் அடையும் பலபடித்தாயுள்ள இன்பங்களில் உயர்ந்த தரத்திலுள்ள இன்பமும் துன்பத்துடன் கலந்திருப்பதாயும் நிலை யில்லாததாயு மிருக்கின்றது. ஆகவே என்றும் மாறாது ஒரு படித்தாய் நிலையுதலுள்ளதாயிருப்பதோ ரின்பத்தைக் கருவி அறிவி னது துணையினால் உலகவாழ்வில் நாம் அடைதல் முடியாது என்பது பெறப்படுகின்றது. அப்படியானால் துன்பங்கலவாது நிலையுதலுளதான இன்பத்தை மக்கள் எவ்வாறு அடைய முடியும் என்பதுபற்றிப் பண்டைத்தமிழ் அறிஞர் அறிந்த உண்மை யாதெ னக் கருதுவாம்.

5. பலதரப்பட விளங்குகிற மக்களுடைய கருவி அறிவு, பயிற்சிக்குத்தக்க அளவு விளங்குதலினால் கருவி அறிவு விளங்கா திருந்தபொழுது ஒரு தடையிருந்து அவ்வறிவு படிமுறையில் விளக்கமுறும்பொழுது அத்தடை சிறிது சிறிதாய் நீங்கி வருகின் றது என்ற உண்மையையும் எத்தகைய விளக்கமுற்ற கருவி அறிவினாலும் உறுதியான நிறைவு (வியாபகம்) அறிவைப் பெற

முடியாதிருத்தலினால் கருவிஅறிவினால் அத்தடையை மக்கள் முற்றிலும் நீக்கமுடியாதென்ற உண்மையையும் பண்டைத்தமிழ் அறிஞர்கள் அறிந்திருந்தார்கள். அத்தடைதான் யாதோ என்னில் அது ஆணவ மல மறைப்பு என்று சைவசமயப் பெரியார் கூறுகின்றார்கள். ஆணவ மலமறைப்புத் தடையைக் கருவி அறிவு, இருளிரவில் விளக்கொளிபோல ஒரு அளவில் நீக்குமே அன்றி முற்றிலும் நீக்காதென்றால் அதனை முற்றிலும் நீக்குகிற கருவி யாது? அதுதான் இறைவனுடைய அருள் என்று சைவசமயப் பெரியார் கூறுகின்றார்கள். மக்கள், கருவி அறிவின் துணையை முற்றிலும் நீக்கி அருளைத் துணையாகக்கொள்ளும் பருவம் அடைகின்றபொழுது அருளின் துணையால் நிறைவு அறிவை (வியாபக அறிவை)ப் படிமுறையில் பெற்று முடிவில் பேரின்பம் சேர்கிறார்கள். ஆகவே உலகவாழ்வில் சிற்றின்பம் அடைதற்குக் கருவி அறிவால் ஈட்டப்படும் பொருள் காரணமாயிருத்தல்போலப் பேரின்பம் அடைதற்கு அருளினாலடையப்பெறும் நிறைவுஅறிவு காரணமாயிருக்கின்றது. அத்தகைய பொருளையும் அருளையும் மக்களுக்குக் கொடுக்கிறவன் இறைவனே. ஆதலினால் பண்டைத் தமிழ் அறிஞர்கள் பொருளையும் அருளையும் செல்வம் என்ற வகையில் வைத்துப் பொருளைப் பொருட்செல்வம் என்றும் அருளை அருட் செல்வம் என்றும் பாகுபாடுசெய்து கூறியுள்ளார்கள். தெய்வப்புலமைத் திருவள்ளுவர் "அருட் செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட் செல்வம்—பூரியார் கண்ணுமுள" என்று 241-வது குறளிற் கூறுகின்றார். அவ்வாறே அவர் அருட் செல்வத்தை உயர்த்தியும் பொருட் செல்வத்தைத் தாழ்த்தியும் திருக்குறள் நூல் 176, 247, 248, 252, 285, 755, 757, 914-ம் செய்யுள்களிற் கூறுகின்றார். தங்கள் பேருணர்வில் விளங்கிய அருட் கருத்துக்களை உலகப்பயன் குறித்துத் தோத்திரச் செய்யுட்களாகப் பாடிய சமயாசிரியர் அந்த (அருட்) செல்வத்தை அதனாற் பெறப்படுகிற இன்பம் என்ற பொருளிலும், அருளையும் இன்பத்தையும் உயிர்களுக்கு அளிக்கிற இறைவனைச் செல்வன் அல்லது செல்வர் என்றும் கூறியருளினர். இன்னும் அவர்கள் மிக்க காதலால் இறைவனைச் செல்வமே என்று விளித்து அழைத்திருக்கின்றார்கள். திருஞான சம்பந்த அடிகள் கோயில் திருப்பதிகம் 5-வது பாட்டு 3, 4 வரிகளில் வருகிற "தில்லைச்சிற்றம்பலமேய—செல்வன் கழலேத்துஞ்

செல்வம் செல்வமே" என்ற சொற்றொடர்களில் செல்வம் என்ற சொல்லை இன்பம் (பேரின்பம்) என்ற பொருளில் வழங்கியிருக்கின்றார். செல்வம் என்ற இச்சொல்லை இன்பம் என்ற பொருளில் அவர் வழங்கினர் என்பது இத் தேவாரத்துக்கு முந்திய 4-வது பாட்டில் "இறைவன் கழலேத்து மின்ப மின்பமே" என்று கூறியதனால் நன்கு விளங்கும். அவர் திருநெல்வேலித் தேவாரப் பதிகம் பதினொரு பாட்டுக்களிலும், அருளை அல்லது இன்பத்தை உடையவர் அல்லது கொடுக்கிறவர் என்ற பொருளில் இறைவனைச் செல்வர் என்று கூறி அருளினர். திருநாவுக்கரசு அடிகள் திருவையாறு திருத்தாண்டகம் 5-வது பாட்டில் "செல்வாய செல்வம் தருவாய் போற்றி" என்பதிலும் சுந்தரமூர்த்தி அடிகள் திருமுல்லைவாயில் தேவாரம் க-வது பாட்டில் "திருவுமெய்ப்பொருளும் செல்வமும்" என்பதிலும் செல்வம் என்ற சொல்லை இன்பம் என்ற பொருளிற் கூறியிருக்கின்றனர். மாணிக்கவாசக அடிகள் பிடித்தபத்து முதல் ஒன்பது பாட்டுக்களில் இறைவனைச் செல்வமே என்று அன்புடன் விளித்து இறுதிப் பாட்டில் இன்பமே என்று விளித்துக் கூறியிருக்கின்றார்.

6. சமயாசிரியர்களல்லாத புலவர்கள் பொதுவாகச் செல்வம் என்ற தனிச்சொல்லைப் பேரின்பம் என்றபொருளிலாவது செல்வன் அல்லது செல்வர் என்ற தனிச்சொல்லை இறைவன் என்ற பொருளிலாவது வழங்கவில்லை. இதனால் சமய ஆசிரியர்கள் தங்கள் அருள் உணர்வில் உணர்ந்த கருத்துக்களை உலகத்தாருக்கு அவர்களது உலக அநுபவத்தில் வைத்து "நீங்கள் பெரிதாக எண்ணுகிற பொருட்செல்வம் நிலையில்லாத சிற்றின்பத்தைத் தருகிற அழி செல்வம், நிலையான பேரின்பத்தைத் தருகிற அருள்தான் அழியாத செல்வம் அதனைப்பெற முயலுங்கள்" என்று இன்பத்தைத் தரவல்ல இருவகைச் செல்வங்களினது வேற்றுமையை அறிவுறுத்தி அருளினார் என்பது பெறப்படுகின்றது. இக்கருத்தை அவர்கள் நேராய்க்கூறிய செய்யுள்கள் தேவார திருவாசகங்களில் பல உள.

7. சமயநூல்களல்லாத பண்டைத் தமிழ் இலக்கிய நூல்களில் செல்வம் என்ற சொல் பொருட் செல்வத்தையும் செல்வன் என்ற சொல் பொருட்செல்வத்தை உடையவனையும் குறிக்க வழங்கப்

பட்டு வந்துள்ளது என்பதை நாம் அறிந்த அளவில் காட்டுதும்.

(1) திருக்குறளில் செல்வம் என்ற சொல் *27 செய்யுள்களில் வழங்கப்பட்டிருக்கின்றது. அவற்றுள் அது தனிச்சொல்லாக வழங்கப்பட்டுவந்த 22 இடங்களில் பொருட் செல்வம் என்ற பொருளில் வழங்கப்பட்டு வந்துள்ளது; ஓரிடத்திலாவது வீட்டுச் செல்வம் அல்லது அருட் செல்வம் என்ற பொருளில் வழங்கப் படவில்லை. அடைமொழியுடன் வழங்கப்பட்ட ஐந்து இடங்களில் அது ' அருட்செல்வத்தையும் (241) அட்டமாசித்தி (எண்பொருள் நோக்கு) செல்வத்தையும் (311) வேண்டாமைச் செல்வத்தையும் (363), கல்விச்செல்வத்தையும் (400), செவிச்செல்வத்தையும் (411), குறிக்க வழங்கப்பட்டு வந்துள்ளது. செல்வர் என்ற சொல் பொருட் செல்வத்தை உடையவர் என்ற பொருளில் நான்கு இடங்களில் (125, 731, 752, 1010) வழங்கப்பட்டிருக்கிறது.

(2) நாலடியாரில் செல்வம் என்ற சொல் †14 செய்யுள்களில் பொருட் செல்வம் என்ற பொருளில் வழங்கப்பட்டிருக்கின்றது; செல்வர் என்ற சொல் பொருட் செல்வத்தை உடையவர் என்ற பொருளில் ‡ ஆறு செய்யுட்களில் 9 இடங்களில் வழங்கப்பட்டுள்ளது.

(3) ஆத்திசூடி கொன்றைவேந்தன் (காப்புத்தவிர) நூல்களில் செல்வம் என்றசொல் வழங்கப்படவில்லை. வெற்றிவேற்கை நூலில் செல்வம் பொருட்செல்வம் என்ற பொருளிலும் செல்வர் பொருட் செல்வமுடையர் என்ற பொருளிலும் §3, செய்யுள்களில் வழங்கப்பட்டு வந்திருக்கின்றது.

(4) மூதுரை 7-வது பாட்டில் மாத்திரம் செல்வம் என்ற சொல் வழங்கப்பட்டிருத்தலில் அது பொருட் செல்வம் என்ற பொருளிலேதான் வழங்கப்பட்டிருக்கின்றது. அவ்வாறே நல்வழி

* மார்க்கசகாயச் செட்டியாரவர்கள் இயற்றிய திருக்குறள் சொற் குறிப்பு அகராதியைப் பார்க்க.

† செல்வம் நிலையாமை 1, 2; ஈகை 3; குடிப்பிறப்பு 2, நன்றியில் செல்வம் 2, 3, 7; ஈயாமை 2, 4; கீழ்மை 6; கயமை 10; பன்னெறி 8; செல்வ நிலையாமை 8; மெய்ம்மை 5.

‡ நன்றியில் செல்வம் 10 (2-இடம்); ஈயாமை 7; மெய்ம்மை 5 (2-இடம்); செல்வ நிலையாமை 8 கீழ்மை 7; மானம் 8 (2-இடம்)

§ 3, 45, 52; செய்யுட்கள்.

32-வது பாட்டிலும் நன்னெறி 14-வது பாட்டிலும் அச்சொல் வழங்கப்பட் டிருக்கிறது.

(5) நீதிநெறி விளக்கத்தில் செல்வம் என்ற சொல் * ஐந்து செய்யுட்களில் 6 இடங்களில் பொருட்செல்வம் என்ற பொருளிலே வழங்கப்பட்டிருக்கின்றது. 81-வது செய்யுளில் மக்கட்பேறென்பதோர் செல்வம் என்று அடைமொழியுடன் வழங்கப்பட்டிருக்கிறது.

(6) புறநானூறில் செல்வம் என்ற சொல் † 3 செய்யுட்களில் பொருட்செல்வம் என்ற பொருளிலும், செல்வர் என்ற சொல் ‡ 3 செய்யுட்களில் பொருட்செல்வத்தை யுடையவர் என்ற பொருளிலும், வழங்கப்பட்டிருக்கின்றது. அந்நூலில் செல்லும் உலகத்துச் செல்வம் என்ற அடைமொழியுடன் கூறப்பட்ட 18-வது பாட்டில் செல்வம் பேரின்பச் செல்வத்தைக் குறிக்கிறது. 6-வது பாட்டில் 'முக்கட் செல்வர்' என்ற தொடர்மொழி மூன்று கண்களையுடைய சிவபெருமானையும், 56-வது பாட்டில் கதிர்ச் செல்வன் என்ற தொடர்மொழி ஒளியையுடைய பகலவனையும் குறிக்க வழங்கப்பட்டு வந்துள்ளது.

(7) செல்வன் என்ற சொல், புதல்வன் தாய் தந்தைக்கு இன்பம் தரும் அருஞ் செல்வம் ஆதலின் தமிழ் நூல்களில் புதல்வன் என்ற பொருளில் வழங்கப்படுகின்றது. (திருக்குறள்- 65, 67, 68 செய்யுள்கள் பார்க்க) அவ்வாறே செல்வி என்ற சொல் புதல்வி என்ற பொருளில் வழங்கப்படுகின்றது.

(8) மேலே கூறிய எடுத்துக்காட்டுகளால் சமயாசிரியர்கள் காலத்துக்குமுன்னும் பின்னும் இலக்கியப் புலவர்களால், செல்வம் என்ற தனிச் சொல் அருளையாவது பேரின்பத்தையாவதும் செல்வன் என்ற சொல் அருளை அல்லது இன்பத்தை அளிக்கின்ற இறைவனையாவதும் குறிக்க வழங்கப்பட்டு வரவில்லை என்றும் சமயாசிரியர்கள் மாத்திரம் செல்வம் என்ற சொல்லை அருளையும் பேரின்பத்தையும் குறிக்கவும் அருளையும் பேரின்பத்தையும் அருளுகிற இறைவனைக் குறிக்கவும், செல்வன் அல்லது செல்வர்

* 6, 16, 63, 66, (2-இடம்) 67, செய்யுட்கள்.
† 28, 148 (2-இடம்) 215.
‡ 34, 35, 47, 188.

என்ற சொல்லை அருளை அல்லது பேரின்பத்தை உயிர்களுக்கு அளிக்கிற இறைவனைக் குறிக்கவும் பல செய்யுட்களில் வழங்கி வந்திருக்கிறார்கள் என்றும் நாம் அறியலாம். மேலே கூறியவைகள் தவிர சில எடுத்துக்காட்டுகள் பின்னே வரையப்படுகின்றன :—

1. 'ஆசை யார அருள் நல்கிய செல்வத்தர்'

திருஞானசம்பந்த அடிகள் திருக்குருகாவூர்த் தேவாரப் பதிகம் 6-வது பாட்டு.

2. 'சிவனென்று நானுன்னை யெல்லாஞ் சொல்லச் செல்வந் தருவானே என்றேனே.' திருநாவுக்கரசு அடிகள் திருவையாறு திருத்தாண்டகம் 8 வது பாட்டு.

3. 'திருவே யென் செல்வமே தேனே வானோர் செழுஞ் சுடரே'

திருநாவுக்கரசு அடிகள் திரு ஆவடுதுறைத் திருத்தாண்டகம் 1-வது பாட்டு.

4. 'செப்பவானிழற் கீழிருந்தருளுஞ் செல்வனே'

சுந்தரமூர்த்தி அடிகள் திருவாவடுதுறைப்பதிகம் 3 வது பாட்டு.

5. 'சிற்றம்பலத் தெங்கள் செல்வம்பாடி.'

திருவாசகம் திருப்பொற் சுண்ணம் 19 வது பாட்டு.

6. 'மறிவறியாச்செல்வம் வந்துபெற்றார்'

திருவாசகம் அடைக்கலப்பத்து 9-வது பாட்டு.

7. 'திருவார் பெருந்துறைச் செல்வனாகி'

திருவாசகம் கீர்த்தித் திருவகவல் 54 வது வரி.

9. வடமொழியில் ஈஸ்வரன் (ईश्वरः ஈஸ்வர:) என்ற சொல் மிக்க பொருட் செல்வத்தையுடைய அரசனையும், அல்லது பொருளாளனையும், இறைவனையும் குறிக்க வழங்கப்படுகின்றது. ஐசுவரியம் (ऐश्वर्यम्) என்ற சொல்லும் மானுட சத்தியையும் தெய்வ சத்தியையும் குறிக்க வழங்கப்படுகின்றது.

(10) செல் என்னும் பகுதியும் அல் என்னும் தொழிற் பெயர் விகுதியும் சேர்ந்துவந்த செல்லல் என்ற சொல் துன்பம் என்ற பொருளில் வழங்கப்படுகின்றது. துன்பமானது மக்களுக்கு உலக வாழ்க்கையில் அடையத்தக்கதாய்ப் பின் கழியத்தக்கதாயுள்ளது என்ற கருத்தே (Pain is Temporary) அச் சொல் அப் பொருளில் வழங்கப்படுதலுக்கு அடிப்படையான காரணம்.

"காதலும் மோகமும்"

(திரு. மா. இராசமாணிக்கம்)

காதலும் மோகமும் ஒன்றெனக் நினைப்போர் பலர். அவர்தம் கருத்துத் தவறு என்பதைக் கம்பர்பிரான் தெளிவாகத் தம் இராம காதையில் கூறியுள்ளார். காதல் என்பது தான் விரும்பிய ஒரு பொருளுக்குத் தன்னை யளிக்கவேண்டும் என்னும் ஊக்கம். காதலின் கிளர்ச்சியே அதன் நோயாய்த் தோன்றுகின்றது. தன்னை அளித்தாகின்ற வரையில் அந்நோய் தீராது. மோகம் என்பது பிறரைத் தான் அடையவேண்டும் எனும் முயற்சி. இதற்கு முடிவே யில்லை. எத்துணை பெற்றாலும் அம்மோகம் தணிந்திலது. 'காதல் நோய்க்கு மருந்தில்லை; மோக நோய்க்கு முடிவில்லை' என்பதே கம்பர்கொண்ட கருத்தாகும்.

சீதையைக்கொண்டு காதலையும் சூர்ப்பநகையைக்கொண்டு மோகத்தையும் கம்பர் விரிக்கின்ற திறம் வியக்கத் தக்கது! தென்றற் காற்றும், இருளும், மதியமும் இருவரையும் வருத்தின, என்றாலும் நோய் ஒவ்வொருவரையும் ஒவ்வொருவிதமாக வருத்தியது. காதல் நோயால் சீதை நலிந்தாள். 'அவள் கண்கள்—— வழி புகுந்த காதல் நோய் பாலில் இட்ட பிரைபோல எங்கும் (அவளது உள்ளத்தில்) பரந்தது' எனக் காதல் பரவும் தன்மையைக் கூறினர். சூர்ப்பநகைக்குற்ற காமக்கனல் 'கொடிய நாகத்தின் விஷம் ஏறியதைப்போல், பரந்தது என்றார். இதனால், காதல் நோய் நுண்மையது, அது அமைதியாகப் பிரைபோலப் பரவும்; மோகநோய் விஷம் ஏறுவதைப்போல விரைவாக ஏறும் என்பன தெரிந்தோம்.

> " மாலுற வருதலு மனமு மெய்யுந்தன்
> நூலுறு மருங்குல்போல் நுடங்குவாள்நெடுங்
> காலுறு கண்வழி புகுந்த காதனோய்
> பாலுறு பிரையெனப் பரந்த தெங்குமே."
>
> —(க. ரா. மிதிலைக்காட்சிப்படலம்)

சூர்ப்பநகைக்கு மோக நோய்,

> " அழிந்த சிந்தைய ளாயயர் வாள்வயின்
> மொழிந்த காமக் கருங்கனல் மூண்டதால்

வழிந்த நாகத்தின் வன்ரெுளை வாளெயிற்
றிழிந்த கார்விட மேறுவ தென்னவே."

—(க. ரா. சூர்ப்பநகைப் படலம்)

'சானகியின் காதல் நோயைக் கண்ணுற்ற மன்மதனும் கருத்தோடு ஒரு சரத்தை அவள் மீது எய்தான். அச்சமயம் எரி கின்ற நெருப்பில் விறகையிட்ட தொத்திருந்தது. சூர்ப்பநகையை நோக்கி மன்மதன் விட்ட அம்பு அகிற்கட்டைபோல் பற்றி யெரிந்து அவள் மோகத்தை அதிகமாக எரியவிட ஊடுருவிப் பாய்ந்தது' என்று காதல் நோய்க்கும் மோகத்திற்கும் உள்ள ஏற் றத் தாழ்வைக் கம்பர் அழகாகச் சித்திரித்துக் கூறுகின்றார். காதல் நோய் கொண்டவர்பால் மன்மதனும் இரக்கம் காட்டுகின்றான் போலும்! மோகநோய் பட்டார்பால் அவன்கணைகள் ஊடுருவிச் செல்கின்றன.

"நோமுறு நோய்நிலை நுவல கிற்றிலள்
ஊமனின் மனத்திடை யுன்னி விம்மினாள்
காமனும் ஒருசரங் கருத்தின் எய்தனன்
வேமெரி யதனிடை விறகிட் டென்னவே."

—(க. ரா. மிதிலைக்காட்சிப்படலம்)

"தாடகைக் கொடியாள் தடமார் பிடை
ஆடவர்க் கரசன் அயிலம்பு போல்
பாடவத் தொழில் மன்மதன் பாய்கணை
ஓட வுட்கி உயிருளைந் தாளரோ."

—(க. ரா. சூர்ப்பநகைப்படலம்)

சீதை, தனக்கு வெப்பந்தந்த தண்மதியைப் பார்த்து; "குளிர்ச்சி யான கடலில் தோன்றிய சந்திரனே! நீ எத்துணைதான் என்னை வருத்துவதாகத் தோன்றினும், யாரையு நீ இதுகாறும் கொன்ற தில்லை ஆதலால் கொடியவன் அல்லை. மரணத்தைப் போக்கும் இனிய அமிர்தத்தோடு வந்த நீ கொல்வது எங்ஙனம் அமை யும்! அதுவுமன்றி நீ ஒரு பெண்ணோடு பிறந்துளாய் என்றால், பின், நீ என்னைச் சுடத்தான் செய்வையோ?" எனத் துதித்தாள். இவ்வாறு சந்திரனைப் பெருமைப் படுத்திப் பேசியது அவள் கொண்ட காதல் நோய்க்கு ஏற்ற இலக்கணம்! சூர்ப்பநகையோ,

தனக்கு அதிகமாக மோகவெப்பத்தைத் தந்து வாட்டிய சந்திரனைத்தின்ன இராகு, என்னும் பாம்பினைக் கொண்டுவரத் துணிந்தாள். இதனால், காதல் நோய்க்கும் மோகநோய்க்கும் உள்ள வெப்பத்தின் அளவு கணித்தறியப்படும் அல்லவா! காதல்கொண்டவள் அப்புருஷனுக்குத் தன்னை அளிக்கத்தக்க உபாயங்களைச் செய்வாள். அப்புருஷன் தன்னைத் துறந்தால் அதன்பொருட்டு நைவாள், ஆயினும் அவனுக்கொரு தீங்கும் செய்யாள். மோகம் கொண்டவளோ ஆடவன் தன்னை மறுத்தால், அவனுக்கு ஏதேனும் இடையூறு செய்து தன் பகைமையைத் தீர்த்துக்கொள்ளுவாள். திங்களைக்கண்ட சீதையின் நினைவும், சூர்ப்பநகையின் நினைவும் கண்டு ஆராயத்தக்கனவே. சீதை கூறுகின்றாள்:—

"கொடியை யல்லைநீ, யாரையுங் கொல்கிலாய் ;
மடிவி லின்னமு தத்தொடும் வந்தனை
பிடியின் மென்னடைப் பெண்ணொடென் றாலெனைச்
சுடுதி யோகடற் றோன்றிய திங்களே."

(க. ரா. மிதிலைக்காட்சிப்படலம்)

சூர்ப்பநகை கூறுகின்றாள்:—

"அணவில் திங்களை நுங்கவ ராவினைக்
கொணர்வெ னோடி யெனக்கொதித் துன்னுவாள்."

—(க. ரா. சூர்ப்பநகைப்படலம்)

சூர்ப்பநகை இராமனைக் கண்ட இரவு நித்திரையற்றவளாய் மோகக் கனலில் வெந்துகொண்டு இருந்தாள். அப்போது அவள் கார்மேகம் ஒன்றைக் கண்டாள். அது இராமனின் உருவம் என எண்ணி அதனைத் தன் முலை பொருந்தத் தழுவினாள். என்னே அறியாமை! மோகக்கனல் செய்யும் மூடச் செயல் இது!

"ஆகக் கொங்கையி னையானென் றஞ்ச
மேகத் தைத்தழு வும்மவை வெந்தன."

—(க. ரா. சூர்ப்பநகைப்படலம்)

சீதையோ தன் மெல்லிய தனங்களை நோக்கி, 'இளைக்காமல் மேன்மேல் பருக்கின்ற என் முலைகளே! நீங்கள் விம்மிப்பருத்து என்ன பயனைப் பெற்றீர்? எழுகின்ற சந்திரனை நிகர்க்கும் காந்தியுள்ள முகமுடையவனும் ஒருவராலும் வளைக்க இயலாத வில்லைக்

கையாண்டவனும் ஆன வள்ளல் இராமனது மார்பின் உள்ளே குடைந்து போய்ச் சேர்வதற்கு வேண்டிய தவங்களைச் செய்யுங்கள் என்று, தன் தனங்களுக்குப் புத்திமதி கூறுகின்றாள். இது வல்லவோ அறிவுடைமை! இஃதே, காதலின் உத்தம லட்சணம்.

"இளைக்கலாத கொங்கைகாள்! எழுந்து விம்மி என்செய்தீர்?
முளைக்கலா மதிக்கொழுந்து போலும்வாண் முகத்தினான்
வளைக்கலாத விற்கையாளி வள்ளல் மார்பின் உள்ளுறத்
திளைக்கலாகு மாகிலான செய்தவங்கள் செய்மினே."

—(க. ரா. கார்முகப்படலம்)

முடிவாகக் கம்பர் சீதை-சூர்ப்பநகை இருவர் தம் விரகதாபத்தையும் நுணுகி ஆராய்ந்து, இருவர் தம் மனத்திலும் இயங்குகின்ற விகாரத்தின் தன்மையைக் கூறி 'ஆசை நோய்க்கு மருந்துமுண்டாங்கொலோ' 'மோகத் துக்கோர் முடிவுமுண்டாங்கொலோ' என்று கூறி முடிக்கின்றார். சீதையின் நிலையைக் கூறுகிறார் கம்பர்,

"வாச மென்கல வைக்களி வாரிமேற்
பூசப் பூசப் புலர்ந்து புழுங்கினள்;
வீச வீச வெதும்பினள் மென்முலை
ஆசை நோய்க்கு மருந்துமுண் டாங்கொலோ."

—(க. ரா. மிதிலைக்காட்சிப்படலம்)

சூர்ப்பநகையைப் பற்றிக் கூறுகின்றார்.

"ஆகக் கொங்கையி னையனென் றஞ்சன
மேகத் தைத்தழு வும்மவை வெந்தன;
போகக் கண்டுபு லம்புமப் புன்மையாள்
மோகத் துக்கோர் முடிவுமுண் டாங்கோலோ."!

—(க. ரா. சூர்ப்பநகைப்படலம்)

வான ஊர்திகள்

(ஆகாய விமானங்கள்)

(திரு. T. V. நீலகண்டப்பிள்ளையவர்கள் B.A. B.L.)

நம்முடைய நாட்டிலே தொன்றுதொட்டு வழங்கிவரும் காவியங்களில் கூறப்பட்டிருக்கும் பொருள்களில் முற்றிலும் நம்பக்கூடாதது என்று இதுகாறுங் கருதப்பட்டிருந்த ஒரு பொருளின் உண்மை இவ்விருபதாம் நூற்றாண்டில் உள்ளங்கை நெல்லிக்கனி போல மிக வியத்தகு முறையில் நிலைநாட்டப்பட்டுள்ளது. நமது புராணங்களில் வான்வழியாய்ப் பறந்து செல்லும் வானஊர்திகளைப்பற்றிக் கூறப்பட்டிருக்கின்றதாயினும் அப்படியான வான்வழிப்போதல் முடியாததன்று என்பது இப்பொழுதுதான் நமக்குத் தெரியவந்தது.

வானில் பறந்து செல்லக்கூடிய திறமை தற்காலத்து நாம் பெற்ற பெரும்பேறுகளில் ஒன்று. இதைப்பற்றிய பழக்கங்கள் மிகப் புதியனவாயினும் சில ஆண்டுகளுக்கு முன்னே நடந்த மிகக் கொடிய ஐரோப்பியப் பெரும்போரிலே வானஊர்திகள் (ஆகாய விமானங்கள்) மிகுதியாகப் பயன் படுத்தப்பட்டன.

இயற்கையை வெல்வதே எப்பொழுதும் மக்களுடைய கருத்து. மக்கள் பண்டுதொட்டே இயற்கைப் பொருள்களின் உண்மைகளை உய்த்தறியும் நோக்கத்தை யுடையவர்கள். அந்நோக்கத்துடன் மிக ஊக்கமாக நம் முன்னோர்கள் உழைத்ததின் பயனாக வியக்கக்கூடிய அரிய பேறுகளை நாம் பெற நேரிட்டது. நீராவியின் வல்லமையைச் செவ்வனே அறிந்தவுடன் இடம் காலம் என்பனவற்றை இம்மட்டோ என்று இகழச்செய்கிற புகைவண்டி புகைக் கப்பல் முதலியன கண்டு பிடிக்கப்பட்டன. மின்சாரத்தின் இயல்பு தெரிந்துகொண்டபின் நொடிப்பொழுதில் ஆயிரக்கணக்கான மைல் தொலைவு செய்திகள் தெரிவிக்கும் வல்லமையுள்ள மின் சாரத்துடிவிடுப்பும் (Electric Telegraph); அதைவிடப் பன்மடங்கு வியக்கத் தகுந்ததுப் தந்திக் கம்பிகளின் உதவி வேண்டாததும் திரைகடலோடித் திரவியம் தேடும் கப்பல்களின் நன்மைக்கு இன்றியமையாததுமான Wireless என்ற "தந்தியில்லாத்

துடிவிடுப்பும்" பகலோன் வெளிச்சம் ஊடுருவிச்செல்ல முடியாத தோல், மாமிசம், மரம், இரும்பு முதலிய பொருள்களையும் ஊடுருவிச்சென்று அவற்றிற்கப்புறம் இருக்கும் பொருள்களை நம் கண்ணுக்குத் தெரிவிக்கக்கூடிய வல்லமையுள்ள Rontgen Rays என்னும் மின்சார ஒளியும், இவைபோன்ற பிற நன்மைகளும் நமக்குக் கிடைத்தன. மக்கள் இவ்வாறு ஒவ்வொரு பூதங்களையும் வென்றார்கள், வானத்தைமட்டும் வெல்லமுடியாது திகைத்தார்கள்.

முற்காலத்தில் பறவைகளைப்போல மக்கள் இறக்கைகளின் உதவியாற் பறந்து செல்ல முயன்றார்கள். ஆயின் போதுமான அளவு பெரிய இறக்கைகளை அசைத்துச் செல்லப்போதிய வல்லமை மக்கள் Muscles தசைகளுக்கில்லை யாகையால் அது முடியாது போயிற்று.

1766-ஆம் ஆண்டு ஒரு முதன்மையான பொருள் கண்டு பிடிக்கப்பட்டது. Hydrogen (ஹைட்ரொஜன்) நீர்வளி என்ற பெரிய வாயு காற்றைவிடப் பன்மடங்கு இலேசானது என்று (Cavendish) என்ற அறிஞர் அவ்வாண்டில் வெளியிட்டனர். அதிலிருந்து பதினாறு ஆண்டுகளுக்குப்பின், அதாவது 1782-ல், Cuvallo என்பவர் இந்த வாயு நிறைந்த சோப் குமிழிகள் ஆகாயத்தில் உயர்ந்து எழும்பும் தன்மையுடையன என்று தெரிவித்தார். இது தெரிந்ததும் வானப் புகைக்கூண்டுகள் (Balloons) செய்துமுடிக்க நேரிட்டன.

மிகவும் எளிதான பொருளால் செய்யப்பட்டதும், வாயு ஊடுருவிச் செல்லமுடியாததுமான ஒரு பெரிய கூண்டு 'ஹைட்ரொஜன்' என்ற வாயுவால் நிரப்பப்பட்டால் உயர்ந்து எழும்புவதோடு மக்களையும் தூக்கிச் செல்லக்கூடியதாயிருக்கும் என்று தெரிந்து (Prof. Charles) சார்ல்ஸ் என்ற இயற்கை யாராய்ச்சி வல்லார் ஒருவர் அவ்வகையான வானஊர்தி ஒன்று செய்து தாம் அதில் ஏறி வானில் உயர்ந்து எழும்பினார்.

சூடேறிய காற்றுச் சாதாரணக்காற்றைவிடச் சற்று நுண்ணிதாகையால், விலை மிகுந்த 'ஹைட்ரொஜனு'க்குப்பதில் அதனைப் பயன்படுத்தி வானஊர்திக் கூண்டுகள் செய்யக்கூடும் என்ற உண்மையறிந்து, பாரிஸ் பட்டணத்தில் 1783-ம் ஆண்டில் மாண்ட்கால்பர் (The Brothers Montgolfer) என்ற உடன்பிறப்பினர்

கள் சூடான காற்றைப் பயன்படுத்தித் தாம் செய்த ஒரு புகைக் கூண்டின் மேலே சென்றார்கள்.

இதுகாறும் கூறியவற்றிலிருந்து கூர்ந்து அறிந்துகொள்ளக் கூடிய குறை ஒன்று இப்புகைக் கூண்டுகளினிடத்துக் காணப்பட்டது. உயர்ந்து செல்லும் வல்லமையுடையனவாயினும், உயர்ந்த பிறகு வேண்டியவிடத்து வேண்டியபடி திருப்ப வசதியில்லா தொழிந்ததால் இக்கூண்டுகள் மக்கட் போக்குவரவுக் கேற்றவை யாய் இருக்கவில்லை. இவைகள் காற்றில் உயர்ந்து எழும்பிக் காற்றுத் தம்மை அடித்துக்கொண்டுபோகும் திசைக்குப் போகுமே யல்லாமல் அவற்றைக் குறிப்பிட்ட ஓர் இடத்தை அடையச் செய்வது முடியாததா யிருந்தது.

இக்குறையானது சில ஆண்டுகளுக்குமுன் நீக்கப்பட்டுக் குறித்த இடத்துக்குப் போகக்கூடிய வானஊர்திகள் இப்பொழுது செய்யப்பட்டிருக்கின்றன. இதை முதலில் செய்து முடித்தவர் ஜெர்மானிய நாட்டினரான செப்பலின் (Count Zeppelin) என்ற பிரபு. இவர் பெயரே இவ்வகை வானஊர்திகளுக்கு வழங்குகிறது.

செப்பலின்

செப்பலின் என்று அழைக்கப்படும் வானக் கப்பலும் பழைமை வாய்ந்த புகைக்கூண்டும் செயலில் ஒன்றேயாயினும், தோற்றத்தில் மிக்க வேறுபாடுடையன. புகைக் கூண்டுகள் உருண்



டைவடிவமானவை; செப்பலின்களோ பருத்து நீண்ட உருவத்தை உடையன. இந்த நீண்டுருண்ட பகுதியிலே நீர்வளி அடைக்கப்பட்டிருக்கிறது. இப்பகுதி 20 அல்லது 25 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். குடைத்துணியானது நன்றாய் விரிந்து நிற்

கும்படி எப்படிக் கம்பிகள் வைக்கப்பட்டிருக்கின்றனவோ, அப்படியே செப்பலினில் இருக்கும் நீர்வளிப் பைகளும் உறுதியாய் இருக்கும்படி அவற்றுள் "அலுமினியம்" (Aluminium) என்ற கனங்குறைந்த பருப்பொருள்களால் செய்யப்பட்ட கம்பிகள் அமைக்கப்பட் டிருக்கின்றன. இப்பைகள் ஒவ்வொன்றும் தனித்தனியாக இருப்பதால் அவற்றுள் ஒன்று கிழிந்துபோக நேரிடினும் மற்றவைகள் வாயுவை வெளிவிடாது கப்பலைத் தாங்கிக்கொள்கின்றன.

நீர்வளி (Hydrogen)

செப்பலின் என்ற வான ஊர்தியின் நீர்வளி அறை மிகப் பெரிய உருவமுடையது. அதன் நீளம் 550 முதல் 600 அடி வரையும், சுற்றளவு 240 அடிமுதல் 300 அல்லது 400 அடி வரையும் இருக்கும். இந்த அறையைச்சுற்றி நாற்புறமும் மக்கள் உலாவக்கூடிய அகலமான தாழ்வாரம் (வராந்தா) அமைக்கப் பட்டிருக்கிறது. இவ் அறையிலிருந்து இரண்டு பெரிய ஊர்திகள் (வாகனங்கள்) தொங்குகின்றன. இவற்றுள் ஒன்றில் 650 முதல் 800 (Horse-power) குதிரையின் வலிமைகொண்ட மூன்று அல்லது நான்கு (எஞ்சின்) பொறிகளும் மற்றியந்திரங்களும் வைக்கப்பட்டிருக்கும். இவ்வியந்திரங்களின் உதவியால் கப்பலானது இயக்கமுறுவதோடு, முன், பின், இடம், வலம் என்ற எல்லாத் திசைகளுக்கும் திரும்பக் கூடியதாக இருக்கிறது. இன்னொரு ஊர்தி (வாகனம்) மக்கள் இருப்பதற்கும் பொருள்கள் வைப்பதற்குமாக அமைந்தது.

இதுகாறும் கூறிய ஊர்திகள் காற்றினும் நிறை குறைந்தவை; தாமே உயர்ந்து எழும்பக்கூடியவை ; இவை ஒருவகை. காற்றை விடக் கனம் மிகுந்ததும் தாமாய் உயர்ந்தெழும்பும் வல்லமையில்லாததுமான மற்றொருவகை ஊர்திகளும் (விமானங்களும்) இருக்கின்றன. இவைகள்தாம் 'எயிரோப்லேன்' Aeroplane என்றழைக்கப்படுவன.　　　(தொடரும்)

திருவருட் பெரியார்

பாம்பன் குமரகுருதாச அடிகள்

(முகப்புப் படம் பார்க்க)

அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு திருவருட்பெரியார் குமரகுருதாச அடிகளார் பாம்பன் சிவாலய அகத்திருப்பணி வேளாளராய சாத்தப்பப் பிள்ளை யென்பாருக்கும் இராமேச்சுரத்தூச் செங்கமல அம்மாளென்பாருக் கும் தலைப்பிள்ளையாகப் பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதித் தொடக்கத்திற் பிறந்தவராவர். இவருடைய பிள்ளைத் திருநாமம் அப்பாவு என்பதாம். ஆரியத்தொடு செந்தமிழ்ப்பயன் நன்கறிந்த இப்பெரியார் தமது இளமைப் பருவந் தொட்டே முருகவேளின் மீது அன்பு முகிழ்த்து வரப்பெற்றவர். அப்பெருமானருளைப் பல நிலைகளிற் கனவிலும் நனவிலும் தரிசிக்கும் பேறு பெற்றவர். சுமார் 20 ஆண்டு இல்லற நடாத்திப் பின்னர்ச் சுமார் 34 ஆண்டு நேரிய துறவறத்தினின்று அச்செவ்வேளின் சீரைத் தாம் செய் தருளிய சாத்திர தோத்திரங்களாலும், தம் வாழ்க்கையாலும் தமிழ்நாடெங்கணும் பரப்பிவந்தவர். தமிழ்மொழிக்கும் சைவநற் சமயத்திற்கும் கொழுகொம்பா யிலகிவந்த அடிகளார் இயற்றி அருளிய நூல்கள் பலப்பல. அந்நூல்களின் செய்யுள்களின் தொகை 6666 என்பதை அவர்கள் தொகை நூலாகிய "குமார சுவாமியம்" என்பதிற் றமே கூறியுள்ளார்கள். திருவருட்பிரகாச வள்ளலாருக்குப் பிறகு தமிழ்நாட்டின் தவப்பயனாய்த் தோன்றி யிலகியவர் இப்பெருமானே என்னலாம். அறிவியற்றுறையில் அவர்களுக்கிருந்த ஆராய்ச்சி வியக்கற்பாலது. இக்கால அருணகிரி நாதரென இலங்கிய இப்பெரியார் 30-5-1929-ல் செவ்வேட்சேவடி நீழலடைந்தனர். இப்பெரியாரின் வரலாறு மகா தேஜோமண் டலம் என்ற அவர் சீடர் குழாத்தினரால் வெளியிடப்பட்டுள்ள சரித்திர நூலில் ஒருவாறு பரக்கக் குறிக்கப்பட்டுள்ளது.

மதிப்புரை

செந்தமிழ் மலர்—ஔவையார் தனிப்பாட்டு ஆராய்ச்சி

செந்தமிழ்ச் செல்வியாராகிய ஔவையார் பெருமையை யார் அறியாதார்? அவர் பாடல்களிற் போந்த அருமை பெருமைகள் இன்னவென அறிய முயலாத அறிஞர் யார்? அத்தமிழன்னையார் இயற்றியுள்ள தனிப்பாடல்கள் பலவுள. சொற்பொலிவும் பொருட் பொலிவும் அமைந்து அணிநலம் திகழ்ந்து ஒளிர்கின்ற அத் தனிப் பாடல்களை யறிவார் பலராயினும் அவற்றின் நலங்களை ஆராய்வார் அரியராயிருக்கின்றனர். ஆகவே அவற்றையும் ஔவையார் தம் கல்வி வலனையும் நலனையும் ஒருவாறு விளக்கும் நோக்கத்துடன் நாகர்கோவில் பண்டிதர். இராமசுப்பிரமணிய நாவலர் அவர்கள் "ஔவையார் தனிப்பாட்டு ஆராய்ச்சி" என்ற பெயருடன் "செந்தமிழ் மலர்" என்ற திங்கள் வெளியீட்டின் மூலமாக அரிய தொரு ஆராய்ச்சியுரை எழுதிவருகின்றனர். இம்மலரின் முத லிதழின்கண் ஔவையாரின் பெயர், காலம், சமயம் என்ற ஆராய்ச்சிகள் வெளிவந்துள்ளன. ஒரு ஆண்டிற்குப் பதினைந்து இதழ்கள் வீதம் இம்மலர் மலர்ந்திடும் என்றும் இதன் ஆண்டுக் கட்டணம் ரூ 1-12-0 என்றும் மாணவர்கட்கு ரூ. 1-0-0 என் றும் நாகர்கோவில் செந்தமிழ் நிலையத்தார் அறிவிக்கின்றனர்.

வர்த்தக ஊழியன்

தொழிலாளர் உலகம் நன்கறிந்தவரும், "இரயில்வே தொழி லாள"ரியக்க ஊன்றுகோலா யுள்ளவருமான திரு. டி. வி. கே. நாயுடு என்பவரை ஆசிரியராகக்கொண்டு வர்த்தக முன்னேற்றத் தைக் கருதி இத் திங்கட்டாள் திருச்சியிலிருந்து வெளிவருகிறது. தமிழ் நாட்டு வர்த்தகர் இதனால் நற்பயன் பெறுவார்களென்று நம்புகிறோம்.

தனவணிகன்

திருமகள் செல்வர்களான நாட்டுக்கோட்டைத் தனவணிக மரபினர்களின் இரங்கூன் சங்கத்தின் சார்பாக வாரந்தோறும் திரு. கருப்பன் செட்டியார் ஆசிரியத் தலைமையின்கீழ் "தனவணி கன்" என்ற ஒரு தமிழ்ச் சஞ்சிகை வெளிவருகின்றது. கைத்

தொழில் வளர்ச்சி வாணிக முன்னேற்றம், பொருளாதார நிலை முதலியவற்றைப்பற்றிய அரிய பெரிய கட்டுரைகளையும் தமிழ் வளர்ச்சியைப் பற்றிய தனிக் கட்டுரைகளையும் உட்கொண்டு கண்ணைக் கவரும் பல படங்களுடன் இச் சஞ்சிகை வெளி வருகின்றது. தமிழ்நாட்டு வர்த்தகர்கள் ஆதரித்து நலமுறுவார்களாக.

கைலாசநாதர் பதிகமும் நித்யகல்யாணியம்மை மும்மணிக் கோவையும்

இத் தமிழ்ச் செய்யுணூல் முத்தமிழ் இரத்னகரம் பானுகவியார் மாணவர், புரிசை சு. முருகேச முதலியார் அவர்களால் இயற்றப்பட்டது. கண்டனூரைச் சார்ந்த பாலையூர் கைலாசநாதபுரமுடையாரான திரு கைலாசநாதர் மீதும் கைலாசபுரம் ஆண்டாளான திரு நித்திய கல்யாணி யம்மையின் மீதும் இச்சிறு நூல் பாடி யமைக்கப்பட்டுள்ளது. தமிழ்க் கல்வி தந்நிலை தவறி இழிவுற்று வரும் இந்நாளில் இத்தகைய நூற்கள் வெளிவந்து அக் கல்வியின் துளங்கா நிலையை யாவர்க்கும் அறிவுறுத்துவது பெரிதும் போற்றற் குரியதாம்.

சீவக நம்பி

நமது செல்வியின் இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினருள் ஒருவரும், லானுகுடி போர்டு உயர்தர பாடசாலைத் தமிழாசிரியருமான திரு. அ. மு. சரவண முதலியாரவர்கள் சிங்கார காவியமாகவும் சங்க காலக் காவியங்களி லொன்றெனை மதிக்கப்படுவதாயுமுள்ள "சீவகசிந்தாமணி" யென்ற பெருஞ் செய்யுணூற் கதையை அழகிய வசன நடையில் சிறு நூலாக எழுதி வெளியிட்டுள்ளார்கள். அப்பெரியார்தம் தமிழ் நடையின் அருமை பெருமைகள் இன்னவென்று யாம் விவரித்துக் கூறவேண்டுவதில்லை. அவர்களால் வரையப்பட்டுள்ள நூல் தெள்ளிய இனிய செந்தமிழ் நடையில் அமைந்திருக்குமென்பதும் பாடசாலைகளின் பாடமாக வைக்கும் பெற்றியமைந்ததா யிருக்குமென்பதும் கூறுமே போதரும். இவ்வழகிய சிறுநூலின் விலை அணு 10. வசன நடையில் வெளிவந்துள்ள இச் சிறிய நூலை யாம் மனமுவந்து வரவேற்கிறோம்.